மொழிவழிச் சிந்தனைகள்

தமிழண்ணல்

மொழிவழிச் சிந்தனைகள்

தமிழண்ணல்

விற்பனை உரிமை :
செல்வி பதிப்பகம்
காரைக்குடி.

மொழிவழி வெளியீடு ஒன்று.
முதற் பதிப்பு: தை, கஅஅஎ
(பிப். 1956)

விலை ரூபாய் 1 – 4 – 0

'தமிழண்ணல்'
எழுதிய
மொழிவழி வெளியீடு இரண்டு
தமிழ் படும் பாடு
(அச்சில்)

வெளியீடு:
கண்மணி நிலையம்
நெற்குப்பை
இராமநாதபுர மாவட்டம்

அச்சிட்டோர்: கலைமகள் - காரைக்குடி

அறிமுகம்

ஏனைய உயிர்களைவிட மக்கள் சிறப்புற்று விளங்குதற்குக் காரணம்எவற்றையும்கூர்ந்து சிந்திக்கும் பழக்கமுடையரா யிருத்தலே. சிந்தனைக்குக் கருவியாக விளங்குவன மொழி களாகும். அவற்றுள்ளும் மனத்திலே தோன்றும் எண்ணங் களை இயல்பாக வெளிப்படுத்த உதவுவது தாய்மொழியே. பிறர் கூறும் கருத்துக்களை நிலையாக மனத்திற் பதித்தற் குப் பயன்படுவதும் அதுவே. இவ்வாறு தாய்மொழியில் சிந்திக்கும் முறையினை நம் தமிழ் மக்கள் அண்மையில் பல துறைகளிலும் நெகிழவிட்டனர். அதன் விளைவுகளை அன்பர் தமிழண்ணல் "மொழிவழிச் சிந்தனைகள்" என்னும் இந்நூலில் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார். எளிய தூய தமிழ் நடையையும் இவர் கையாண்டிருக்கிறார். இவர் கூறும் கருத்துக்கள் இவரது ஆழ்ந்த சிந்தனையை யும், நடுவு நிலைமையையும், மன உறுதியையும் உணர்த்து கின்றன.

இந் நூலாசிரியரைப் பல ஆண்டுகளாக யான் அறிவேன். இவர் சிறந்த தமிழ்ப் புலமையும் தமிழார்வமும் மிக்கவர். பல ஆண்டுகளாகத் தமிழாசிரியராகப் பணி புரிபவர். நூலாசிரியராகவும் விளங்குபவர். தூய தமிழ் நடையில் நாளிதழ்களில் கட்டுரைகளும், செய்திகளும் வெளியிட்டு வருபவர். பல இடங்களில் வாய்மொழியாக வழங்கும் தாலாட்டுப் பாடல்களையும் தொகுத்தவர். சிறந்த பாடல்கள் சிலவற்றைப் பாடிய கவிஞர். படிப்பவர் மனங்கொள்ளும் வண்ணம் கவர்ச்சிமிக்க உரைநடை எழுதிவருபவர். இந்நூலின் பொருளைப் பல ஆண்டுகள் இவர் சிந்தித்து வந்திருப்பதை யான் நன்கு அறிவேன்.

தமிழ் நாட்டில் தமிழ் மொழி பல துறைகளிலும் தாழ்வுற்றிருக்கும் இழிநிலையையும், இத்தகைய தாழ்வுக்குக் காரணமாகிய சோர்வுடைமை, ஒற்றுமையின்மை முதலிய இழி குணங்களையும் நகைச்சுவையுடனும், அவலச் சுவையுடனும் ஆசிரியர் இந்நூலில் எடுத்துக்காட்டியுள்ளார். இத்துறையில் விரிந்ததொரு நூல் இவ்வாசிரியரால் வெளியிடப்பெறும் என்பதற்குரிய குறிப்புக்களை இந்நூலில் காணலாம்.

மொழிவழி மாநிலப் பிரிவினை ஆராயப் பெற்றுவரும் இந்நாளில் இந்நூலை வெளியிட்டிருப்பது காலத்திற்கேற்ற நல்ல தொண்டாகும். மொழி நூல் பற்றிய முறையான ஆராய்ச்சி நம் நாட்டிற்குப் புதிதாகும். அமெரிக்கா போன்ற நாடுகளில் இத்துறையில் கடந்த நூற்றாண்டில் செய்யப்பெற்றிருக்கும் ஆராய்ச்சியை உன்னிப் பார்க்குங்கால் நாம் மலைக்க நேரிடுகிறது. இப்போதுதான் அமெரிக்கருடைய ஆதரவின்கீழ் இந்தியாவில் மூன்று பல்கலைக் கழகங்கள் மொழித்துறைக்கான பட்டப் படிப்புக்களையும், ஆராய்ச்சி நிலையங்களையும் தோற்றுவிக்கத் தொடங்கியுள்ளன. எனவே, மக்கள் உள்ளத்தை ஈர்க்கும் தகுதி வாய்ந்த இந்நூல் தமிழ் அன்பர்களால் மகிழ்ச்சியுடன் வரவேற்கத் தக்கதாகும்.

'சோமலெ'

பொது அலுவலர்,
அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

குடும்பத்தினர்க்கு......!

எனது பல ஆண்டுச் சிந்தனைகளில் சிலவற்றின் உருவமே இந்நூல். தமிழ்மொழிக் குடும்பத்தினர் அனைவருக்கும் இம் மொழிவழிச் சிந்தனை இயல்பான செயலாக வேண்டும் என்பதே என் விருப்பம்.

குடும்பநலம்நாடும் உறவினர்கட்குள் கருத்துவேறுபாடுகள் வரும்; அதைப் பகைமையாகக் கருதக்கூடாது. இந்நூலில் யாரையும் நான் பாராட்டியிருந்தால் அது அவர்களின் அன்பைப்பெற அன்று; யாரையும் இடித்துரைத்திருந்தால் அது அவர்களின் பகைமையைப் பெறவும் அன்று!

மொழிவழிச் சிந்தனைகளை விருப்பு வெறுப்பின்றித் தானும் தமிழ்மொழிக் குடும்பத்தினனே என்ற தன்னினைவோடு படியுங்கள்; உண்மை புலனாகும்.

தமிழண்ணல்

நன்றியுரை

சென்னைச் சிந்தனைப் பதிப்பக உரிமையாளர் திரு. அ. இளங்கோவன் இந்நூலை எழுதுமாறு என்னைத் தூண்டினார்கள். கலைமகள் அச்சக உரிமையாளர் திரு. தி.நா. நாராயணன் இதனை அழகுற அச்சிடச் செய்தார்கள். என் நண்பர் திரு. வை. கணபதி அவர்களின் சிற்பத்திறம் இந்நூலின் முகப்பை அழகுபடுத்துகிறது. எழுத்துத் துறையில் எனக்கு வழிகாட்டியாகத் திகழும் அறிஞர் சோமலெ என்னைத் தமிழகத்திற்கு அறிமுகம் செய்துவைத்துள்ளார்கள். இவர்கட்கு என் மனம் நிறைந்த நன்றியறிதல்!

6 – 2 – 1956
நெற்குப்பை

தமிழண்ணல்

உயிர்த் தமிழே!

கவிஞர் முடியரசன்

முன்னைப் பழம் பொருளே - வேந்தர்
மூவர் உயிர்த் தமிழே!
கன்னற் சுவை யமுதே - என்றன்
கண்ணின் மணி விளக்கே!
என்னைப் பழிப்பவனை - நான்
ஏதும் நினைப்ப தில்லை
உன்னைப் பழிப்பவனைப் - பகையாய்
உள்ளம் நினைக்கு தம்மா!

திங்களைச் சாருதென்றல் - என்றன்
சிந்தை கொதிக்கு தம்மா!
பாங்குனை மேவுதென்றல் - நெஞ்சம்
பாய்ந்து மகிழு தம்மா!
ஆங்கிலம் கற்றவரும் - வேறு
அயல் மொழி கற்றவரும்
ஈங்கு புறக்கணித்தார் - அறிவை
என்று பெறு வாரோ?

தாயைப் பழித்துரைத்தால் - நெஞ்சம்
தாங்கிட ஒப்பவில்லை
நாயவன் என்றுமிழ - உணர்வு
நாடிப் பெருகுதம்மா!
காயைக் கவர்ந்திடுவார் - நல்ல
கனிச்சுவை தானுணரார்
மாயச் சுமையுடலை - ஓம்பிட
மானம் விலைபகர்வார்

தோள்வலி மிக்கமையால் - எம்மைத்
தூற்றினர் வடவேந்தர்
வாள்வலி யாலவரை - வீழ்த்தி
வாழ்ந்ததும் இந்தஇனம்
மாள்வது கண்டபினும் - பேதை
மாந்தரும் துஞ்சுகின்றார்!
ஆள்வதும் எம்மொழியோ? - இங்கே
ஆண்மையும் செத்ததுவோ?

o

வழிபாடு

அறிவுருவான இறைவனே! எங்களையும் எங்களது எண்ணம் சொல் செயல் யாவற்றையும் சூழ்ந்திருக்கிறாய். நாங்கள் உன்னருளால் துயிலுணர்ந்து எழுந்து உன்னை வழிபடுகிறோம். என்றும் எங்கட்கு நல்லருள் புரிவாயாக!

எமையீன்ற அருமைத் தமிழ்நாடே! உனக்குத் தலை தாழ்த்தி வணக்கம் செலுத்துகிறோம். இந் நாட்டுக் குடிமகனாகப் பிறந்தமை பற்றி இறும்பூதெய்துகிறோம். உனது வளம் நுகர்ந்து வாழும் நாங்கள் என்றும் உனக்கு நன்றி யுடையவர்களாக விளங்குவோமாக!

ஊனாக, உயிராக, உயிர்நாடியாக விளங்கும் தமிழன்னையே! நீ உயர்ந்தால் யாம் உயர்வோம். எம் அறிவு யரும். அறமும் ஓங்கும். உனது வாழ்வே எங்கள் வாழ்வு. வள்ளுவன் குறளை வகையுறப் பயிலவும், வள்ளுவங்களைக் கொள்ளும் விதத்தில் வாழ்க்கையிற் கொள்ளவும் எங்கட்கு நல்லருள் புரிவாயாக! தன்னைப் பழித்தாரையும் தனக் கடிமை ஆக்கிவிடும் அன்னையே! தந்நலம் விட்டு உன்னலம் பேணும் மனநலத்தை எங்கட்கு அருள்வாயாக!

எமையீன்ற தாய்க்கும் தந்தைக்கும் மக்கள் இன மீன்ற தமிழ்நாடு தனக்கும், பண்பாட்டு எழில்தந்த தமிழுக்கும் எம்மால் தினையளவு நலமேனும் கிடைக்கும் வண்ணம் செயலாற்றும் நாள் எமக்குத் திருநாளாகும். இதற்குரிய தூய்மையான உள்ளமும் வாய்மையான கூட்டுறவும் திறமையான தமிழ்ப் புலமையும், பிறமொழி யறிவும், செய

லாற்றும் வன்மையும், மாற்ருரைப் புறங்காணும் ஆற்றலும் தோற்றப் பொலிவு மிக்க திண்ணிய உடலும் நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் எமக்கு வாய்க்குமாக !

வாழிய செந்தமிழ் ! வாழ்க நற்றமிழர் ! வாழிய வையகம் !!

உறுதிமொழி

மொழிநலமே நாட்டுநலம். நாட்டுநலமே நம்நலம். எனவே நமக்குத் தந்நலத்தைவிடத் தமிழ்நலமே பெரிது. நாம் அழியலாம்-நம் இனம், மொழி, நாகரிகம் அழியாதவை. அவை உலக நாகரிக வளர்ச்சிக்கும் மனித இன முன்னேற்றத்துக்கும் ஈடுகொடுக்குமாறு பேணு வதே நமது தலையாய கடமை.

மொழிநலம் பேணும்போது வேண்டியவர் வேண்டா தவர் என்று வேறுபாடு கருதக்கூடாது; பெரியவர் சிறியவர் என்று அஞ்சி அகலக் கூடாது; புகழ்வரும் இகழ்வரும் எனக் கருத்துப் பிறழக் கூடாது; செல்வாக் குப்படைத்தவர்களின் சீற்றத்திற்கோ அறிவிலிகளின் ஆத் திரத்திற்கோ, அன்புடையவர்களின் இன்மொழிக்கோ கொண்ட கொள்கையை விட்டுவிடக் கூடாது; '' ஆயிரங் கோடி எதிரிகள் இட்டு அழைத்தாலும் '' தொடக்கூடாது; பட்டம் பதவி கண்டு பல்லிளித்து, ஏற்றம் வருமென்று ஏமாந்து, தந்நலங்கருதித் தடுமாறக் கூடாது.

மதம், சாதி, கட்சி என்ற பிடிப்புக்களில் அகப் படாமல், அரசியல் வேறுபாடுகளை மொழியிற் புகுத்தி முறைபிறழாமல் நடுவுநிலைமையுடன் – 'மனத்துக் கண் மாசின்றி' – மொழி வழிப்பட்ட நமது சிந்தனைகளை எண்ணுவோமாக! 'எண்ணிய எண்ணியாங்கு எய்தும் திண்ணியவர்' என்ற பெருமைக்கு உரிமை பூணுவோமாக!

தமிழே !

தமிழைச் செந்தமிழ், கன்னித் தமிழ், 'என்றுமுள தென்றமிழ்' என்றெல்லாம் அழைக்கிருர்கள். உலக மொழிகளில் மிகத்தொன்மை வாய்ந்தது இலக்கண வரம்பில் இணையற்றது, சொல் வளத்தில் எல்லே கடந்தது, தெய்வ அருள் மிக்கது என்றெல் லாம் பாராட்டுகிருர்கள். தமிழர்கள் மட்டும் இவ்வாறு பாராட்டினல் தற்பெருமை என்று விட்டுவிடலாம். வெளி நாட்டுக்காரர்களின் புகழுரைகளேயும் கேட்கும் போதுதான் வியப்பாக இருக்கிறது. இத்தகைய தமிழின் இன்றைய நிலே என்ன? உண்மையைச் சொன்னல் இன்று நோய்வாய்ப்பட்ட தாயின் நிலே யில் தமிழிருக்கிறது. தமிழ் மக்கள் தங்கள் தாயைப் பேணத் தவறிவிட்டார்கள். மக்களின் உள்ளமன்ருே மொழி வாழுமிடம். தமிழகத்தார் உள்ளத்தில் இன்று, வந்த மொழிகளெல்லாம் சொந்தங்கொண் டாடுகின்றன.

'தமிழ்ச் சோலே' என நாம் மகிழ்ந்தால் அதற் குத்தான் வேரிலே வெந்நீர் ஊற்றி வருகிருேம் என்று கூறுகிருர்கள் சிலர். கலப்புத் தமிழ் வளர்ந் தோங்கி வரவரக் 'கன்னித் தமிழ்' என்று சொல்ல வும் கூச்சமாக இருக்கிறது. இலக்கணத்தைப் புறக் கணிப்பதுதான் இலக்கிய வளர்ச்சி என்ற எண்ணம்

வளரவளரச் 'செந்தமிழ்' என்ற சொல்லுக்குச் சிறப்புக் குறைந்து வருகிறது. இங்நிலேயில் தமிழ் வளர்கிறதா? என ஆராய்ந்தால் வருந்திக் கண்ணீர்விட வேண்டிய நிலேமையில் இருக்கிருேம். ஆர்வம் உள்ள அளவு மொழியறிவோ, உணர்ச்சியுள்ள அளவு செயலாக்கமோ, பேச்சிலுள்ள அளவு நடைமுறை வளர்ச்சியோ தமிழுக்கு வாய்க்கவில்லே. இந்தக் கசப்பான உண்மையை நினேக்காமல் இருப்பதால் தமிழ் வளர்ந்துவிடாது.

o

தாயே!

தாய் மக்களேப் பெற்று வளர்ப்பதும், மக்கள் தாயைக் காப்பாற்றுவதும் உலக இயற்கை. மொழிகளுக்கும் இது பொருந்தும். பிற நாடுகளிலெல்லாம் பெற்ற தாய்மொழியையும் பிறந்த பொன்னுட்டையும் மக்கள் தம் கண்ணும் கருத்துமாகப் போற்றுகிருர்கள். இங்கோ மக்கள் இன்னும் குழந்தைகளாகவே அறிவு வளராத நிலேயில் இருக்கிருர்கள்.

தமிழ்தான் தன்னுற்றலால் தன்னேயே காப்பாற்றிக் கொண்டு, தமிழரையும் காப்பாற்றுகிறது. ஆயிரம் மொழிகள் இங்கே புகுந்தாலும் அவற்றைச் சொல்லொன்ருல் வெல்லுந்தன்மை தமிழுக்கிருக்கிறது! தன்னே அழித்துவிட எண்ணி அணுகியவர்களேத் தமிழ் அடிமையாக்கியிருக்கிறது! சிதைத்து விடுவோம் என்று சீறி எழுந்தவர்களும் தமிழின் கவிதைச் சிரிப்பொலிக்குக் கருத்தைப் பறிகொடுத்

இருக்கிறார்கள்! நயவஞ்சகமாகத் தமிழை நாடியவர்கள் 'தன்வினை தன்னைச்சுடும்' என்று தமிழ்ப்பாடம் படிக்கிறார்கள்! தமிழ் மொழியிற் பேசுவதும் தாழ்வு எனக் கருதியவர்கள் அழகாகத் தமிழ் பேச இன்று அவர்களையும் அறியாமல் ஆசைப்படுகிறார்கள். இலக்கணத்தைச் சிதைக்கவென்று பாடுபட்டவர்கள், தங்கள் கருத்துச் சிதைந்தமை கண்டு கண்ணீர் வடிக்கிறார்கள்! ஆம், தமிழ்க் கதிர்கள் பாய்ந்ததுமே, பகைப்புலப் பனித்திரைகள் அழிந்து ஒழிந்துவிடுகின்றன.

o

தமிழ் மக்கள்

தமிழ் உயர்ந்த, சிறந்த மொழிதான். ஆனால் தமிழர்கள் தாழ்ந்த நிலையில் உள்ளனரே! பெருமையின் பேரெல்லையில் தமிழ் விளங்குகிறது. சிறுமையின் இறுதி எல்லையில் தமிழ் மக்கள் வாழ்கின்றனர். இதனால் தமிழ்மொழி படும்பாடுகள் சொல்லுந்தரத்தவல்ல. நோயின் தன்மை சிலபோது மருத்துவரின் மனநிலையையே குழப்பிவிடுவது போல, நம் தாயின் நிலையும் இருக்கிறது. எனவே தமிழ் உயர வேண்டுமானால், தமிழ் மக்களிடையே சீர்திருத்தம் காணவேண்டியதிருக்கிறது. தமிழர் சமுதாய விடுதலைபெற்று, 'சாதி சமயச் சழக்குகளை'த் துறந்து, நல்லறிவுபெற்று வாழ்வில் வளம்பெற்றால் அன்றே தமிழ் வளரும் பொன்னாளாகும். அதுவரை எத்துணைதான் தமிழின் பெருமைகளை எடுத்துக்

கூறி "மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்" பேசி னலும் தமிழ் வளராது.

தமிழைப் படிக்கும்போது "அழிக்கவியலாத அரண், சிதைக்கவொண்ணுச் சிறப்பு, மாற்றமுடி யாச் செம்மை, எழில்குன்ரு இளமை" என்றெல்லாம் நினைத்துப் பெருமைப்படத் தோன்றுகிறது. தமிழர் களைப் பார்க்கும்போதோ மனநோய் முற்றிவிட்டதே என்ற மயக்கந்தான் ஏற்படுகிறது. ஆயிரம் ஆண்டு களாகப் பிறருக்குத் தொடர்ந்து தோல்வியுற்று, வாழ்விற் சிதைவுற்ற அடிமை மனப்பான்மை, அறி வின்மை; உடனிருந்தே கொல்லும் நோயனையார் கூட்டுறவு, நன்றியின்மை என்று இவ்வாறு பெரு நோய்கள் பல தமிழ் நாட்டில் வாழ்வோரனைவரிடமும் தொத்திக்கொண்டுள்ளன. செய்தித் தாள்கள், அர சியல் வாதிகள், தந்நலக்காரர்கள் அனைவரும்—பெரும் பாலும் இத்தொத்துநோய்களின் கிருமிகளைப் பரப் பும் தொண்டினையே செய்துவருகின்றனர். காய்ச்சலிற் கிடந்து உழல்பவனுக்கு நல்லுணவுகளும் கைக்கு மாறுபோல, தமிழ் மக்களுக்கு மொழிவழிப்பட்ட நற் சிந்தனைகளெல்லாம் தியவையாகவும், தியவையனைத் தும் நல்லவையாகவும் தோற்றுகின்றன. தங்களைப் பற்றித் தாழ்வாகக் கருதிக்கொள்வதும், பிறமொழி யாளரைக் கண்டால் மூக்கு நிலத்திலுராய வீழ்ந்து வணங்குவதும், தமிழைப்பற்றித் தெளிவான எண் ணமோ, அறிவோ இல்லாமலிருப்பதும் என்ன இத் தகைய கேடுகள் அனைத்தும் தமிழன் குருதி நரம்பு

களிலும் ஊறி நிற்கின்றன. இதனால் தமிழகத்தில் வீசும் அறிவுக் காற்றிலேகூட நச்சுநோய்க் கிருமி களும் கெட்ட நாற்றமும் கலந்து வருகின்றன!

o

தொத்துநோய்

தமிழ் மக்களைத் தொத்திக்கொண்டு அழித்து வரும் மனநோய்கள் இரண்டுவிதமாகக் கிளைத்திருக் கின்றன. ஒன்று தற்பகை என்னும் நோய். மற்றது பிறர் பகை என்னும் நோய். முதலிற்சொன்ன தற்பகை 'யானை தன் தலையிலேயே மண்ணை வாரிப் போட்டுக்கொள்வதுபோல்' தமிழர்களே தங்கட்குப் பகையாக விளங்குவது. இதற்கு முதற்காரணம் அறியாமை. இரண்டாவது சொன்ன பிறர்பகை ஆட்சி அதிகாரம் என்று செல்வாக்குத் தேடிக் கொண்டு ஆணவச் செயல்களை அடுத்தடுத்துப் புரிந்துவருகின்ற பிறநாட்டார் பகை. இந்தப் பகைக்கு முதற்காரணம் பொறாமை. தற்பகை தமிழை வாழ்த் திக்கொண்டே வளர்க்கும் வழிதெரியாமல் அழித்து வருகிறது. பிறர் பகையோ தமிழைத் தாழ்த்திக் கொண்டே 'வாழ்த்து' வதுபோலக் 'கலப் பாலில் துளிநஞ்சு' கலந்து வருகிறது. முன்னவர்கள் தமிழை வளர்க்கத் தெரியாமல் திண்டாடுகிறார்கள்! பின்ன வர்களோ தமிழை அழிக்க முடியாமல் திண்டாடு கிறார்கள்!

o

தமிழ் எங்கே?

ஆங்கிலம் வணிகமொழி - உலகமொழி! அதைப் படிக்காவிட்டால் நாம் உலக நாடுகளுடன் போட்டியிட்டு உயரமுடியாது. ஏன்? தமிழை வளர்க்கவே ஆங்கிலப் படிப்புத் துணையாகிறது என்கிறார்கள். உண்மை, அதைப் படிக்கிறோம்.

'இந்தி' நாட்டுமொழி. இனி இந்த நாட்டில் ஆங்கிலத்திற்கு உரிய நிலையை இந்திக்குத் தரப் போகிறார்கள். இந்தியப் பேரரசில் நாம் இணைந்திருக்க வேண்டுமென்றால், மத்திய அரசில் நமது பங்குகளை நாம் பெற்றுச் செல்வாக்குத் தேட வேண்டுமென்றால் இப்போதே இந்தி படிக்க வேண்டும்; இன்றேல் இளித்தவாயர்களாகிவிடுவோம் என்கிறார்கள். வடநாட்டினரின் ஆதிக்க வெறி இவர்கள் கூற்றை மெய்யாக்கி வருகிறது. தமிழ்நாடு இந்தியையும் படித்து வருகிறது.

"சமஸ்கிருதம் நமது புராதனமொழி. பாரதநாட்டுப் பண்பாட்டை வளர்த்தமொழி. ஆத்மீக வளர்ச்சிக்கு அடிகோலிய மொழி. அதற்குப் புத்துயிரளித்துப் பாதுகாத்துப் பல்கலைக் கழகங்களும், பள்ளிக்கூடங்களும் பாடம் நடத்த வேண்டும், கட்டாயப் படுத்திப் படிக்கவைக்க வேண்டும்-வழக்கிழந்த மொழி யென்று விட்டுவிடக்கூடாது" என்று கூறிச் செல்வாக்குப் படைத்தவர்கள் அதனையும் வளர்த்து வருகிறார்கள். தமிழ் நாட்டில் வடமொழிக்கும் இடம்தந்து, பொருள்தந்து வளர்க்கிறோம்.

"இசையா...... இதிலே பாஷைத் துவேஷம் கூடாதே. தெலுங்கில்தான் இசையிருக்கிறது. தமிழிசை என்பதெல்லாம் குறுகிய நோக்கம், மொழி வெறி. அர்த்தம் புரிந்தாலும் புரியாவிட்டாலும் தெலுங்குக் கிர்த்தனங்களை உருப்போட்டு உருட்டாவிட்டால் நீ இசையாசிரியன் ஆகவியலாது, உன்னைச் சங்கீத வித்வானென்று ஒப்புக்கொள்ள மாட்டோம். நீ மறந்துகூடத் தமிழிலே ஒரு பாட்டுப் பாடிவிட்டால் நீ உட்கார்ந்து பாடிய இடத்தைக் கழுவிப் புண்ணிய தானம் செய்வோம்" என்று கூறுகிறார்கள். நம்மில் பலர் அதை மனமொழி மெய்களால் ஒப்பி ஒடுங்கி நடக்கிறார்கள்.

திருக்கோவில்களில் 'திருமணச் சடங்குகளில், நல்ல விழாக்களில், அன்றாட வாழ்வியல் முறைகளில், மக்களின் பெயர்களில், வீட்டு முகவரிகளில், பட்டப் பெயர்களில், அஞ்சலகம், ரயில்வழி, வானொலி, செய்தித்தாள் அலுவல்களில், எங்கும் தமிழல்லாத மொழிகளுக்கே தமிழகத்தில் செல்வாக்கு! நண்பர்களின் உரையாடல் பிறமொழியில்; கடிதப் போக்குவரத்துப் பிறமொழியில்; இவ்வாறு பெருமைதரும் செயல்களிலெல்லாம் பிறமொழியின் ஆட்சி!

எஞ்சிய நிலையிலே அங்கும் இங்கும் ஒட்டிக் கொண்டிருக்கும் தமிழும் தமிழாக இல்லை. கலப்பாக கதம்பமாக, சிதைவாக, சீரழிந்த நிலையிலே தமிழ் வழங்குகிறது. கேட்பாரில்லாத நிலை தமிழுக்கு! இந்த நாட்டில் கண்ணுக்கு முன்னும் தமிழில்லை-கடவுளுக்கு முன்னும் தமிழில்லை! உலகிலே அடிமைகள் பலர் இருந்திருக்கிறார்கள். ஆனால் தமிழரைப் போன்ற

அடிமையின் எல்லையைக் கண்டவர்கள் முன்னும் இல்லை; பின்னும் இருக்கப் போவதில்லை. இதனால் தான் தமிழகத்திலே "தமிழ் எங்கே?" என்று தேடினால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய சங்க இலக்கியத்திற்கே திரும்பவேண்டியதிருக்கிறது. இன்றும் சங்க இலக்கியம் படித்த தமிழனே உரிமை உணர்வுடன் விளங்குகிறான் என்பது கண்கூடு.

o

நூற்றில் ஒருவர்

புறநானூற்றில் இளம்பெருவழுதியின் பாடலொன்று என் நினைவிற்கு வருகிறது. "உண்டாலம்ம இவ்வுலகம்" என்று தொடங்குகிறது அப்பாட்டு. இவ்வுலகம் அழியாமல் நிலைபெற்றிருப்பதற்குக் காரணம் - எவ்வளவோ தீமை பெருகி நிற்பினும் அதைத் தாங்கிக்கொண்டு இவ்வுலகம் காலத்தை வென்று வாழ்வதற்குரிய காரணம்,

......................இந்திரர்
அமிழ்தம் இயைவதாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே! முனிவிலர்
துஞ்சலும் இலர், பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிரும் கொடுக்குவர்! பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்! அயர்விலர்!
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே" - புறம் (182)

என்று விளக்குகிறது. தமிழின் நிலைமையும் இவ்வாறு தான் உளது. நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது

பேர் ஒன்று அறியாமையாலோ அல்லது பொருமை யாலோ தமிழுக்குத் தீங்கு இழைத்து வருவதைக் காண்கிறோம். இவர்களைத் தவிர்த்துத் தமிழை வளர்த்துத் தாமும் வாழவேண்டும் என்ற நல்ல எண்ணம் படைத்த மீதமுள்ள ஒருவரையும் காண் கிறோம். இவ்வாறு ஆற்றலும் அறிவும் நிறைந்த சான்றோர் பலர் அவ்வப்போது தோன்றியமையா லேயே தமிழ் மரபு கெடாமல் இன்றும் நிலைபெற்று வருகிறது.

நாம் வாழும் இந்நாட்களிலேயே தமிழுக்குத் தனித்தியங்கும் ஆற்றல் உண்டு என்பதை எடுத்துக் காட்டித் தமிழின் வளர்ச்சியொன்றே கருதி உழைத்து -தமிழை மதியாதாரை விட்டு ஒதுங்கி வாழ்ந்த மறைமலையடிகள்; அல்லும் பகலும் கன்னித் தமிழுக் குப் பாடுபட்டே கண்ணொளிமங்கிக் கடைசி நாட்களைக் கழித்துச் சென்ற திரு. வி. க; சாதி வேறுபாட்டை மனத்துட்கொண்டு தமிழை மாற்றாந்தாயாகக்கருதும் சிலர்போலச் சிறுமை வலையிற் சிக்காது தமிழைத் தாயென்று தலைநிமிர்ந்துகூறித் தமிழை வளர்ப்பதே நமது கடமை என்பதை நினைவுறுத்தி அதனால் தம்மைச் சூழ்ந்து வாழ்ந்தோரின் சுடு சொற்களுக்கு ஆளாகி மறைந்த கவிஞர்களின் கவிஞன் பாரதி... என்று பல சான்றோர்கள் வாழ்ந்தனர்; வாழ்ந்து வருகின்றனர் அல்லவா! இவர்களைப் போன்ற சான்றோர்கள் ஓரிருவர் அவ்வப்போது தோன்றி வருவதாற்றான் தமிழ் அழியாமல் உலகோடு நிலைபெற்று வருகிறது.

o

இயல்புணர்ச்சி

தலைகீழ்ப் பாடம்

உலகப் பெரியார் காந்தியடிகள் ஆங்கில இலக்கிய நடை கைவரப்பெற்றவர். ஆனால் அவர் தமது வரலாற்றை - சத்தியசோதனையை முதலில் தமது தாய்மொழியாம் குசராத்தியிலே எழுதினர்; பிறகு அவரே அதனைச் சுவை குன்றாமல் ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்தார். இங்கே தமிழ்நாட்டு அறிவாளிகள் பலர் ஆங்கில மேதைகளாக உள்ளனர், தமது ஆங்கிலப் புலமைத் திறத்தால் உலகிலே தனிச் சிறப்புப்பெறுகின்றனர் - அதே நேரத்தில் தமிழை விட்டிலும் பேசவராது, எட்டிலும் எழுதத் தெரியாது என்ற நிலையில் தாய்மொழியில் தற்குறிகளாக உள்ளனர். உலகமொழி தெரிந்தாலும் தாய்மொழிக்கு உரிய இடமளிக்கிறார் உலகப் பெரியார். உலகமொழி தெரிந்துவிட்டதே என்ற செருக்கில், தாய்மொழியைத் தாழ்த்திப் பெருமைபெற முயலுகிறான் தமிழன்! அதிலும் முற்றும் கற்றுத் துறைபோகிய ஆங்கிலப் புலமையாளர்களாவது 'தமிழே வராது' எனப் புறக்கணிப்பதோடு விடுகின்றனர். இந்த அரைகுறைப் பேர்வழிகளோ தாம்கற்றுவிட்ட ஒன்றிரண்டு ஆங்கிலச் சொற்களையேனும் தமிழிலே புகுத்திப் பேசியும், எழுதியும் பெருமை பெற்றுவிட ஆசைப்படுகின்றனர்.

உலக நாடுகளின் அவையில் (யு. என். ஓ.) அலுவல் மொழியான ஆங்கிலத்தைவிட்டுத் தாய் மொழியிலே பேசி ஆங்கிலத்திலே மொழிபெயர்க்கச் செய்கிறார் ருசியத் தூதுவர் 'மாலடோவ்'. நாம் நம் மிடையே பேசும்போதும் ஆங்கிலத்திலே பேசுகிறோம்; அது நமக்கு அருவருப்பாக இல்லை, மதிப்புத்தரும் செயலுமாகிறது! கீதாஞ்சலி போன்ற எத்துணையோ தலைசிறந்த நூல்களை வங்காளியிலே எழுதிவிட்டுப் பிறகு ஆங்கிலத்தில் தாமே மொழிபெயர்த்து 'நோபல் பரிசும்' பெற்றார் தாகூர்! இங்கே மைலாப் பூர்த் தமிழனும், இலங்கைத் தமிழனும் அடுக்களை யிலேகூட ஆங்கிலத்திலே பேசி அடிமைப் புத்தி யைக் காட்டுகின்றான்!

இங்கிலாந்து சென்றாலும், ருசியாவிற்குச் சென் றாலும் பத்து நிமிடங்களாவது 'இந்தி' மொழியிலே பேசிவிட்டுப் பிறகுதான் ஆங்கிலத்திலே பேசுகிறார் பண்டிதர் நேரு; தமது தாய்மொழிப் பற்றை-விடுதலை வேட்கையை - உரிமை யுணர்வை வெளிப்படுத்தும் ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொள்கிறார்! நாமோ பிறநாட்டிலே தமிழைப் பரப்பாவிட்டாலும் நம் மிடையே தாயை வளர்க்காவிட்டாலும் 'தமிழிலே என்ன இருக்கிறது?' என்று தலை நிமிர்ந்து கேட்கத் துணிகிறோம். இதனாற்றான் தாய்க்கு உணவில்லை, உடையில்லை என்கிறாயா? இல்லையென்றால்-உன்னா லும் அவளுக்கு உதவ முடியவில்லையென்றால் பாழ்ங் கிணற்றில் வீழ்ந்துயிரை மாய்த்துக்கொள், வீணாக ஊராரிடம் குறைகூறாதே'' என்கிறார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், அடிமைத் தமிழரைப் பார்த்து! எத்

துணைக் கவிஞர்கள், புரட்சியாளர்கள், தலைவர்கள் தோன்றி மறைந்தாலும் தமிழன் விடுதலை வேட்கையை வெளிப்படுத்துவோனாக இன்னும் மாற வில்லை; மாறாகத் தனது அடிமைப் புத்தியை, அறி வின்மையை, ஆழ்ந்த நோயை வெளிப்படுத்தவே விரைகின்றான்!

o

இயல்புணர்ச்சி

கன்றுக்குத் தாயிடம் ஏற்படும் ஆர்வ உணர்ச்சி யும், குழந்தைக்குத் தாயை அறிந்து பற்றுக்கொள்ளும் அன்புணர்ச்சியும் யாரும் கற்றுக்கொடுத்து வருவன அல்ல. அவை இயல்புணர்ச்சிகள்; ஒருவனுக்குத் தாய்மொழியிடம் ஏற்படும் உணர்ச்சியும் இத்தகை யதுதான். பிறப்போடு-குருதி நரம்பு எலும்போடு தோய்ந்த உணர்ச்சி அது!

ஒருவன் தண்ணீரில் மூழ்கியபோதும் மூச்சு விடத் துடிப்பது எவ்வளவு இயற்கையோ அது போல, தன் மனத்திலெழும் கருத்தை எத்தகைய சூழ்நிலையிலும் தாய்மொழியிலேதான் கூற வேண்டு மென மனிதனுடைய உணர்ச்சி எழும். ஒருவன் உறங்கும்போது ஓங்கி அறையப்பெற்றால், தாய் மொழியிலேதான் கதறி எழுவான் என்பர் உயிர் நூலார். தாய்மொழி என்பது அனிச்சைச் செயல் போல முதுகந்தண்டு எலும்பிலிருந்தும் தோன்றக் கூடிய உணர்ச்சி யாகும். தமிழனுக்கு இவ் வியல் புணர்ச்சி அழிந்திருக்கிறது; அவன் முதுகிலே

அறைபெற்றால் ஆயிரம் மொழிகளிலே அலறி எழு வான் இன்று; அப்போதும் தன் தாய்மொழிக்கு இடமளிக்க விரும்பாத பரந்த மனப்பான்மைக்காரன் தமிழன்!

ஒரு கன்றைத் தாய்ப் பசுவிடமிருந்து பிரித்தா லும் பிற கறவைகளிடம் கொண்டு சேர்த்தாலும் அவை ஒட்டுவதில்லை; உறவு விளைவதில்லை. மாறாகப் பசு இடறுதலும், கன்று கதறுதலுமே காண்போம்! குழந்தையைத் தாயைவிட்டுப் பிரித்தால் தாயும் நலி கிறாள்; குழந்தையும் நலிகிறது. அதுபோலவே ஒரு நாட்டு மக்களின் தாய்மொழி உணர்ச்சியைத் தடை செய்தால் நாடும் அடிமைப்படுகிறது; மக்களும் நலிகிறார்கள். மூச்சுவிடவேண்டும் என்று யாரும் சொல்லிக்கொடுக்கவில்லை; பசியெடுக்க வேண்டும் என்று யாரும் வயிற்றைத் தூண்டிவிடவில்லை. மூச்சு நின்றால் உயிர் நின்றது என்று பொருள்; பசி எடுக்காவிட்டால் உடல் நலமில்லை என்பதற்குச் சான்று! இவை நமக்குத் தெளிவான மனப்பாடம். தாய்மொழியில் பற்றுக்கொள்ளுங்கள்; வளருங்கள் எனப் பிறநாடுகள் பெரும்பான்மையானவற்றில் இயக்கங்கள் ஏற்படவில்லை. காரணம், அங்கெல்லாம் மக்களுக்கு இயல்புணர்ச்சி மாளவில்லை. தமிழர் களிடையே இத்தகைய 'வளர்ப்பு இயக்கங்கள்' பெருகி நிற்பதனால் இங்கே இயல்புணர்ச்சி மறைந்து நிற்கிறது என உணர்கிறோம். ஆனால் 'வளர்ப்புக்கு மறுப்பும்'- அதற்கான இயக்கங்களுங்கூடத் தமிழரி டையேதோன்றும்போதுதான் 'உளநலக்' குறைவுக்கு மூலமான நோய்களின் சாயல் நமக்குப் புலனாகிறது.

பலங்குறைந்த உடலை, நோய் எளிதாகப் பற்றிக் கொள்வதுபோலத் தமிழையும் 'உள நோய்கள்' தாக்குகின்றன.

o

செய்தித்தாள்

தமிழ்நாட்டில் ஆங்கில நாளிதழ்கள் பல வெளியிடப்பெறுவதை நாமறிவோம். தமிழ் மக்களே, தமிழ் மக்களுக்காகத் தமிழ்நாட்டில் வெளியிடும் ஆங்கில நாளிதழ்கள் இவை. காலைப் பதிப்பு 12பக்கம், மாலைப் பதிப்பு 12 பக்கம் என ஒரே நாளில் 24 பக்கங்கள் சாதாரணமாக அச்சிடுகிறார்கள். இந்த 24 பக்கங்களிலும் ஏதேனும் ஒரு மூலையிலாயினும் எழுத்துப் பிழையோ, சொற்பிழையோ, இலக்கணப் பிழையோ, மரபுப் பிழையோ காணவியலாது; காணாதவாறு உழைத்துக் கவனித்து உருவாக்குகின்றனர். ஆங்கிலேயர்கள் அல்ல அச்சிடுபவர்கள்; தமிழர்களே! ஆறாயிரம் கல் தொலைவிற்கு அப்பால் உள்ளவர்களும் மரபு பிழையாமல் தன் மொழியை வளர்க்கக் கற்றுக் கொடுத்திருக்கிறான் ஆங்கிலேயன்! அவன் வாழ்கிறான்.

தமிழ்நாட்டு மக்களே, தமிழருக்காகவே, தமிழ் நாளிதழ்களே நடத்துகிறார்கள். பெரும்பாலும் நான்கு பக்கம் இன்றேல் ஆறு பக்கம் அச்சிடுகிறார்கள், ஒரு நாளைக்கு. அவற்றிலே மூலைமுடுக்கிலே வேண்டாம் தலைப்பிலேயே பிழை; எடுத்ததெல்லாம் பிழை

எழுத்துப் பிழை; சொல்லையும் இலக்கணத்தையும் மரபையும், கல்லும் கத்தியும் கோடரியும் அனைய தீய பண்புகளால் கொல்லுகிறார்கள் தமிழர்கள். "எப்படி எழுதியிருந்தால், உமக்கென்ன? செய்திதானே முக்கியம்" என்று ஏமாளித் தமிழன் கூசாமல் வாதிடுகிறான், இயல்புணர்ச்சி யற்ற காரணத்தால். ஆங்கிலேயன் செய்தியின் உயிராக மொழியைக் கருதிச் சிதையாமல் தருகிறான் – நாமும் அந்த மொழியைப் பேண வழிகாட்டுகிறான். அவனை அண்டியும் நமக்கு அறிவு விளங்கவில்லை; நம்மிலே பலர் விளங்காதவர்களாகவே போய்விட்டோம்.

o

அரசியலார்

பொதுமனிதன் மட்டுந்தான் தமிழ்நாட்டிலே இயல்புணர்ச்சி அற்று இளித்தவாயனாக – ஏற்றம் வேண்டுவார்க்கெல்லாம் குனிந்து நிற்கும் ஏமாளியாக இருக்கிறான் என்று நினைக்கக்கூடாது. அறிவு நிறைந்த பெரியோர்களும், அரசியல் வாதிகளும், இலக்கிய அறிஞர்களும், மொழித்துறை ஆய்வாளர்களுங்கூட - இயல்புணர்ச்சியாம் பரம்பரைச் செல்வத்தை இழந்து பிறந்துவிட்ட காரணத்தால்– இளித்தவாயர்களாகவே, ஏமாளிகளாகவே உள்ளனர்.

எடுத்துக்காட்டாக ஒன்று பார்ப்போம். மத்திய இந்திய அரசினர் 'இந்தியை'ப் பரப்ப முயலுகின்றனர். இந்தியப் பாராளுமன்றத்தில் பெரும்பகுதி

இந்தியிலேயே பேசுகின்றனர். இந்திய ஆட்சிமுறை அனைத்திலும் - மத்திய அரசு சம்பந்தப்பட்ட ஒவ்வொரு துறையிலும் இந்தியையே புகுத்தி, வளர்த்து வருகின்றனர். இதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். இதற்கு மேலும் சென்று அவர்கள் மாநில அரசுகள் மீதும் இந்தியைத் திணிக்க முயலுகின்றனர்; அதனையும் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். இந்த நேரத்திலேதான் சென்னை மாநில ஆட்சியைத் தமிழிலே நடத்தவேண்டும் என 'விண்ணப்பம்' கொண்டுவந்தார் ஒரு நற்றமிழர். இதை மறுத்து, விண்ணப்பமே கொண்டுவர வேண்டாமெனத் தடுத்துவிட்டார்கள், ஆட்சியாளர்கள் ஏன்? அவர்கள் கூறிய காரணம், "தமிழ்நாட்டிலே இன்னும் சில பகுதிகளில் மலையாளிகளும், தெலுங்கரும் கன்னடரும் உள்ளனரே; அவர்களின் பிரதிநிதிகள் சிலர் இன்னும் சட்டசபையில் இருக்கிற காரணத்தினால் தமிழை ஆட்சி மொழியாக்க முடியவில்லை" என்பதுதான்!

பாராளுமன்றத்திலே பெரும்பான்மை எனக் கூறி இந்தி ஆளுமாம்; தமிழகத்திலே தமிழர் பெரும்பான்மையினராக இருக்கும் சபையிலே கூடத் தமிழ் ஆளாதாம் - ஆளக்கூடாதாம்! எப்படியிருக்கிறது இவர்களுடைய வாதம். இதைப் பரந்த மனப்பான்மை எனச் சிலர் போற்றுகிறார்கள், பைத்தியம் பிடித்து வேட்டியைக் கிழிப்பவனைத் தன்னை மறந்த செயல் புரியும் சிந்தனையாளன் என்பதுபோல!

o

ஒலிமுறை

ஆங்கிலேயர்கள் உலகமெல்லாம் பரவினார்கள். தமிழகத்திற்கும் வந்தார்கள். நம்நாட்டு ஊர்ப்பெயர்களை யெல்லாம் அவர்கள் மொழியிலே உச்சரித்துக் கெடுத்தார்கள். திருச்சி என்னாமல் 'டிர்ச்சி' என்றார்கள்; தூத்துக்குடி என்னாமல் 'டுடிக்கோரின்' என்றார்கள்; மதுரை என்னாமல் 'மெசுரு' என்றார்கள். இப்படியே திருவையாற்றைத் 'டிருவாடி' ஆக்கி, தஞ்சையை 'டாஞ்சோர்' ஆக்கி, பூவிருந்தவல்லியைப் 'பூனேமேலே' ஆக்கி, திருவல்லிக்கேணியை 'ட்ரிப்ளிகேனும்' ஆக்கினார்கள். ஊர்ப் பெயர்கள் மட்டுமா? மிளகுத் தண்ணீர்-மிளக்டண்ணி ஆயிற்று. தமிழ் - டமிள் ஆயிற்று. கட்டமரம் - கட்டமொரான் ஆயிற்று. இவ்வாறே தமிழ் ஒலி அவர்களின் வாயசைவிற்கு ஏற்ப எவ்வெவ்வாறோ ஆயிற்று! நம்மைப் பொறுத்தவரை இது மிகக் கொடுமையென்றாலும் ஆங்கிலேயரைப் பொறுத்தவரை இத்தகைய உச்சரிப்புகளுக்காக நாம் குறை சொல்லுவதற்கு இல்லை. அவர்களின் ஒலிமுறைக்கு ஏற்பத்தான் அவர்கள் எதனையும் உச்சரிக்கக்கூடும். இயல் புணர்ச்சியினின்றும் வழுவாத அவர்கள் தமது ஒலி முறைக்கு ஏற்ப உச்சரிப்பதையே நடை நாகரிகமாகக் கருதுவார்கள்.

தமிழுக்கும் ஆங்கிலத்தைப் போலத் தனி ஒலி முறையுண்டு. அதனால்தான் நம் முன்னோர்கள் 'ஜான்'- என்ற ஆங்கிலத்தை யோவான் என்றும், ஜாகப்-என்பதை யாகோபு என்றும், பைபிளை விவிலி

யம் என்றும், வில்லை உயிலென்றும், கன்பர்ம் என்பதைக் கண்புறமென்றும், பாட்டில் என்பதைப் போத்தல் என்றும் இவ்வாறே ஆங்கிலச் சொற்களைத் தமிழ் ஒலிக்கு ஏற்ப மாற்றி உச்சரித்தனர், இயல் புணர்ச்சி அதிகம் மழுங்காத காலத்தில்! இன்றோ இத்தகைய தமிழ் ஒலிமுறை ஆக்கங்களைக் கண்டால் கேலி செய்கிறான் தமிழன். ஆங்கிலம் படியாத தமிழன் *Full* என்பதை 'புல்' என்றாலோ, *Coffee* என்பதைக் காப்பி என்றாலோ, *Station* என்பதை டேசன் என்றாலோ, *Time* என்பதை டயம் என்றாலோ சிரிப்பு வந்துவிடுகிறது அரைகுறை ஆங்கிலத் தமிழனுக்கு! எந்த நாட்டுச் சொல்லையும் தன் ஒலிக்கு ஏற்ப உச்சரிப்பதே இலக்கணம், நாகரிகம், மதிப்பு எனக் கருதுகிறான் ஆங்கிலேயன். தமிழனோ பிறமொழிச் சொற்களையும் தமிழாக்கம் செய்யாது அப்படியே உச்சரிக்க வேண்டுமென்று முயன்று-அந்த முயற்சியிலே தன் ஆவியை இழக்கிறான்!

சேலம் இராமசாமிக் கவுண்டர் தமது சொற்பொழிவு ஒன்றில் "ஆங்கிலத்தில் கடிதம் எழுதும் பொழுதும் ஏதேனும் எழுத்துப்பிழை நேர்ந்துவிட்டால் தமக்கு அவமானம் என்று கருதி, எழுத்துச் சந்தேகம் ஏற்படுமானால் உடனே அகர வரிசையைப் புரட்டிப் பார்த்து எழுதுகின்றனர் ஆங்கிலங் கற்ற பேராசிரியர்கள். ஆனால் தம் தாய்மொழியாகிய தமிழில் எத்துணைப் பிழை விழுந்தாலும் அதைத் தமக்கு அவமானமாகக் கருதுவதில்லை. தாய்மொழியாகிய தமிழில் பிழை விட்டால் தம் உயிரையே விட்டதாக

எண்ணிப் பிழை வரா வண்ணம் எழுதவேண்டும்,'' என ஒருமுறை குறிப்பிட்டதைத் தமிழர் மறவாது போற்றக் கடமைப்பட்டுள்ளனர்.

o

உயர்ந்த உள்ளம்

ஆங்கிலத்தில் எளியநடையில் எழுதுகிறார்கள். கல்வியின் வளர்ச்சிக்கும், எழுத்தாற்றலுக்கும் ஏற்ப நடையின் தரங்கள் மாறுபடுகின்றன. கற்றறிந்த புலமையாளர் எழுதும் ஆங்கில நடை அழுத்தமாக வும் கடினமாகவும் சிறப்பாகவும் இருக்கிறது. 'ஷா' வின் நடை கூர்மையான அரம் போன்றது. எச். ஜி. வெல்சு என்ற பெரியாரின் நடையோ ஆழமானது பி. ஏ. வகுப்பு மாணவர்கட்குக் கூட எளிதில் புல னாகாது எனப் பாராட்டிப் பெருமைப்படுத்துகிறார்கள், அவரது நடையை. ஆங்கில மேதை சான்சன் எழுதி யது எளிய ஆங்கிலமன்று, அறிவுச் சுடர் வீசும் ஒளி முத்துக்களை அழகாக அடுக்கிவைத்த பேழை போன் றது அவரது நடை. அதைப் புரிந்துகொள்ள வேண் டும் என்றால் ஆங்கிலம் தெரிந்திருந்தால் மட்டும் போதாது - ஆழக் கற்றிருக்கவேண்டும்.

'சேக்பியர்' எழுதிய நாடகங்களிலே காற்பாகத்திற்கு மேல் வழக்கிழந்த சொற்கள்; சொல்லமைப்பும் வழக்கிழந்தன; சில இலக்கணமும் வழக்கிழந்தவை. சேக்ஸ்பியரைப் படிப்பது எளிதன்று. அது பாமரனுக்கும் புரியும் ஆங்கிலமன்று. ஆயினும் அதைப் பாராட்டுகிறார்கள்; "இழந்தால் எங்கள் நாட்டையேனும் இழப்போம், சேக்பியர் தந்த இலக்கியத்தை இழக்கமாட்டோம்" என்று மார்தட்டிக் கூறுகின்றனர் ஆங்கிலேயர். தமிழர்கள் சேக்பியரோ மில்டனோ யாராயினும் படித்துத் தெரிந்து கொள்ளாவிட்டாலும் பாராட்டத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். அதில் தவறுவதில்லை, காரணம் அது பெருமைதரும் செயல் என்ற நினைப்பு!

ஆங்கிலம் படிக்கும்போதே உடன் அகர வரிசை வைத்துப் படிக்கவேண்டும் என்கிறார்கள். அந்த முறையினால்தான் மொழியறிவு வளரும் எனப் போதனை புரிகிறார்கள். ஆங்கிலப் புலமையாளரை இத்துணை ஆயிரம் சொற்களறிந்தவர், இன்ன விதத்தில் சொற்களுக்கும் எழிலேற்றி வழக்காற்றுதலில் வல்லவர், மரபு தவறாத ஆங்கில நடையாளர் என்றெல்லாம் பலபடப் பாராட்டிப் பேசுகிறார்கள். இவ்வளவும் ஆங்கிலேயர்கள் செயல் மட்டுமன்று, தமிழர்களும் இத்தகு பண்பாளர்களாக விளங்குகிறார்கள், ஆங்கிலத்தைப் பொறுத்தவரையில். தமிழைத் தொடும்போதுதான் தவறிவிடுகிறார்கள், தந்நினைவு அற்றுத் தடுமாறுகிறார்கள், தமிழ்நாட்டுப் பெருமக்கள்!

○

தாழ்ந்த மனம்

தமிழிலே ஒருவர் இலக்கிய நடையிலே எழுதி விட்டால் வந்தது பேராபத்து! "ஐயோ, இது பண்டிதர் நடை" என்று பல்லிளிக்கிறார்கள். இலக்கண மரபு பிழையாமல் ஒருவர் பேசினாலும், எழுதினாலும் இவர்களெல்லாம் 'சுத்தத் தமிழர்கள்' என்ற ஏளனம் பிறக்கிறது, தமிழர்களிடமிருந்து! "இது பாமர மக்களுக்குப் புரியுமா? ஐயோ! தமிழை இப்படி வன்மையாக எழுதிப் பயமுறுத்துகிறார்களே!" என்று நீலிக்கண்ணீர் நிலத்தில் வடியக் கூலிக்குத் தாளமிடும் கூட்டம் கூக்குரலிடுகிறது. ஆங்கிலத்திலே சான்சன் எழுதினால் ஆழமான நடை; தமிழிலே மறைமலையடிகளார் எழுதினால் அது கடினமான, விளங்காத நடை-பண்டிதர் நடை; எச். ஜி. வெல்சு எழுதிய ஆங்கிலம் கல்லூரியின் எல்லை வகுப்பை எட்டியவனுக்கும் புரியவில்லையாம், அதனால் அது உயர்ந்த ஆங்கிலமாம்! தமிழிலே சிறந்த நடையிலே சிந்திக்கும் வகையிலே பேராசிரியர் மாணிக்கனார் வள்ளுவம் எழுதினால், அது எளிதில் விளங்காத, புரியாதநடையாம்! ஆங்கிலத்தை நினைத்தால் அதற்கெனத் தனியான மொழி மரபுகள், தமிழை நினைத்தால் அவையெல்லாம் உடனே 'பண்டிதர்' மரபு ஆகிவிடுகின்றன தமிழனுக்கு! தமிழன் சமுதாயத்திலேதான் தீண்டாத சாதியினரை உண்டாக்கி வைத்து ஒதுக்கினான் என்பதில்லை, தாய்மொழியிலே கூடப் 'பண்டிதர்கள், பண்டிதர் தமிழ், பண்டிதர் நடை' என ஒரு தனிச் சாதியை ஒதுக்கிவைத்துக் கேலிபேசி மகிழ்கிறான். தமிழனின் தாழ்ந்த மனப்

பான்மைக்கு எல்லே கிடையாது. சேற்றிலே கிடக்கும் எருமை மாடு அதன் நாற்றத்தையும் நறுமணம் என மகிழ்ந்து கிடப்பது போலவே, இிமையிலே அழுந்தி விட்ட இவ்வினத்தானுக்குத் இிமையே உயர்ந்த தாகப்படுகிறது! அதன் காரணமாகப் பைத்தியக் காரன் மருத்துவரையே வெருட்டுவது போல, தமிழ் மக்களும் மொழித்துறை யறிஞர்களேயே எதற்கும் எளனம் செய்துவருகின்றனர்!

○

சங்க இலக்கியம்

விவிலியமும், சேக்பியரும் இன்றைய நடை முறை ஆங்கிலமல்ல, பழைமை நிறைந்தவையே. அவற்றைப் படிக்கும்போது அகரவரிசையின் துணை கொண்டு படித்துத் தெளிந்து மகிழ்கிறன் தமிழன். அவனே தமிழை நோக்கும்போது, "சங்க இலக்கி யமா? பழைமை மிக்க பாடல்களாயிற்றே, வழக்கிழந்த சொற்களேயுடையனவாக இருக்குமே, சேச்சே, இதைப் படித்துப் புரிந்துகொள்ள முயற்சி செய்வது அறிவினம், இச் சங்க இலக்கியங்களேக் கட்டிக் கொண்டுபோய்க் கடலிலே போடு" என்கிருன், இது வரை இழந்ததும் பறிகொடுத்ததும் போதாதென்ற எண்ணத்தில்! தமிழ் என்ருல் படித்தவுடன் புரிந்து விட வேண்டுமாம், அதற்காக எவ்வளவு கலப்படமாக, அவியலாகத் தமிழை எழுத முடியுமோ அவ்வளவு கேடுகளேயும் புகுத்தித் தமிழை எழுத வேண்டுமாம். ஆங்கில மொழியறிவு அகர வரிசையின் துணையின்றி

வளராதாம். தமிழறிவு தானே வளருமாம். பழந் தமிழ்ச் சொற்களை மீண்டும் வழக்காற்றுக்குக் கொண்டுவர முடியாதாம். ஆனால் பிறமொழிச் சொற்களைப் புதிதாகப் புகுத்தினால் அவை வழக்கத்திற்கு வந்துவிடுமாம். இவ்வாறு துறைதோறும் துறை தோறும் தமிழுக்குக் கேடே சூழ்கின்றார்கள் சிலர். இவர்கள் உண்மையிலேயே தமிழர்களாகப் பிறந்து அறியாமையினால் இவ்வாறு தவறான வழிகளிலே தமிழ் மக்களைச் செலுத்துகின்றார்களா? அல்லது தமிழைத் தலைமுழுக நினைக்கும் நெஞ்சுடையவர்களா என நாம் அஞ்சுகின்றோம். தமிழ்நாட்டிலே சிலர் தொடர்ந்து தமிழுக்கு ஊறுதேடும் வழியே சூழ்ந்து, பச்சைக்கொடியிடையே பின்னிக் கிடக்கும் பச்சைப் பாம்பு போலக் காலமறிந்து "கொத்துதற்கு" நஞ்சு நெஞ்சினராய் ஊடாடி வாழ்தலைக் காணும்போது "இவர்கள் யார்?" என்ற கேள்வி பிறக்கிறது; அவர்கள் பிறப்பின்கண் ஐயம் உண்டாகிறது! தமிழனாய்ப் பிறந்தும் தமிழ் வளர்ச்சிக்கு ஊறு தேடுவதே உயிராகக் கொண்டவன் தமிழனாக இருக்க முடியுமா என ஐயப்பட்டு, அது வளர்ந்து வலுத்து வருகிறது-தமிழ்ப் பகைக்கு அழிவு நெருங்கி வருகிறது என்பதைத்தான் இது காட்டுகிறது.

o

அடிமையின் ஆழம்

அடிமையில் மோகம்

"என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்
என்று மடியும் எங்கள் அடிமையில் மோகம்"

என்று மனமுருகிப் பாடினார் பாரதி. பாரதிதாசனும், அவரது பரம்பரையும் புரட்சிப் பண் பாடிய பிறகும் பழைய பல்லவியையே பாடவேண்டிய நிலையில் நாமிருக்கிறோம்.

தமிழன் வடவர்க்கு 'நமஸ்காரம்' போட்டு வரவேற்றான். முகமதியர்க்குச் 'சலாம்' போட்டு வரவேற்றான். ஆங்கிலேயர்க்கு 'குட் மார்னிங்' போட்டுப் பணிந்தான். இப்போது வருபவர்க்கு 'நமஸ்தே' போடக் கற்றுவருகிறான். இன்னும் யார் யாருக்கு என்னென்ன போடக் காத்திருக்கிறானே என்று திருச்சித் தமிழறிஞர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் தமிழ்ப்பெரு மக்களைச் சிரிக்கவைத்து இடித்துக் கூறுவதை நாம் அடிக்கடி கேள்விப்பட்டிருக்கிறோம். இவ்வாறு கவிஞர்களும் அறிஞர்களும் பெரியார்களும் பாடியதையும் எழுதியதையும் சொல்லியதையும் கேட்கும்போதெல்லாம் உடனுக்குடன் தமிழனுக்கு உணர்ச்சி வருகிறதென்பது உண்மைதான். ஆனால் அது சோடாவை உடைத்ததும் கிளம்பும் ஆவிபோலத் தோன்றி அடுத்த கணம் குறைந்து மறைந்தொழி

கிறது. ஒளியின் வெம்மையும், மதியின் தண்மையும், காற்றின் அசைவும்போல எப்போதும் இரண்டறக் கலந்து நிற்கும் இயல்புணர்ச்சியாக இல்லை. இதனுற்றுன் பழக்கம் காரணமாக நுகத்தடியை உயர்த்தியதும் பூட்டுவதற்குத் தயாராக வந்துநின்று தலை நீட்டும் வண்டி மாடுகளைப் போல, தமிழன் எவ்வளவுதான் உணர்ச்சிவயப்பட்டுப் பேசினுலும் ஆரவாரித்தாலும் பிறருக்கு அடிமைப்பட்டு உழல்வதினின்றும் அணுவளவும் விடுதலை பெற்றுனில்லை. உலகத்தில் பிறருடைய கட்டுப்பாட்டால், பிறருடைய ஆணவத்தால் அடிமை நிலைக்கு ஆளானவர்கள் இருந்திருக்கிருர்கள். ஆனுல் தமிழர்களைப் போலத் தாங்களே விரும்பிப் பிறருக்கு அடிமைப்பட்டு அவர்களின் ஆணவத்திற்கு அடிகோலும் பரம்பரையடிமைகளை உலக வரலாற்றிலேயே காணவியலாது.

○

அடிமையின் ஆழம்

வேற்று மொழிகளைக் கற்பது தவறன்று. அவ்வாறு கூறுவது குறுகிய மனப்பான்மை. ஒரு மனிதன் தாய்மொழியோடு, பிறமொழிகளையும் கற்கக்கூடுமானுல் அது அவனுக்கும் ஆக்கம், அவன் மொழிக்கும் ஆக்கம். இது உலக இயல்புதான், உண்மைதான்!

"தமிழர்கள் பிறமொழிகளின் மீது வெறுப்புக் காட்டக்கூடாது. அவன் இதயம் விரிவடைய வேண்

டும். எல்லா மொழிகளையும் கற்றுச் சிறப்படைய வேண்டும்'' என்று அமைச்சர்கள், அறிவு படைத்தவர்கள் அனைவரும் வாதிடுகிறார்கள்; அதை நாம் மறுக்கவில்லை. ஆனால் இவர்களின் வாதமெல்லாம் பிற நாட்டாருக்குப் பொருந்துகின்றனவேயன்றி தமிழ்நாட்டிற்குப் பொருந்தவில்லை. இதை நாம் சிந்திக்கவேண்டும். பிற நாட்டார் தாய்மொழியோடு கூடப் பிறமொழி படிக்கிறார்கள். தமிழர்களோ தாய் மொழி தவிர்த்துப் பிறமொழி படிக்கிறார்கள். ஆங்கிலேயன் ஒருவன் தமிழ் அனைய பிறமொழியைக் கற்றால் அந்த மொழியில் உள்ள உயர்ந்த இலக்கியங்களாம் அணிகளைத் தன் தாய்க்கு-மொழிபெயர்த்து-அணிவிக்கிறான். இதனால் தமிழனுங்கூடத் தன் தாய் மொழியைப்பற்றிய ஆராய்ச்சியிலே இறங்க வேண்டுமானால், தாய்நாட்டு வரலாற்றை, நிலையை, வளர்ச்சியை உணரவேண்டுமானால் ஆங்கிலத்தின் துணை அவனுக்கு இன்றியமையாததாகின்றது. தமிழனோ பிறமொழி கற்றதும் தான் ஒரு தமிழன் என்ற உணர்ச்சியையே இழந்துவிடுகிறான். தான் கற்ற மொழி எதுவோ அதற்கே உரியவனைப் போலத் தன்னைப் பற்றித் தமிழர்களிடையே விளம்பரம் செய்துகொள்கிறான். 'இந்தி' படித்த ஆசிரியர்கள் ''நமஸ்தே'' போட்டு ''ஜீ ஹாங்'' செய்து ''பண்டிட்ஜீ'' ஆகிவிடுவதை நினைவுபடுத்திப் பாருங்கள்; ஆங்கிலங் கற்றவன் ஆங்கிலத்தால் தமிழுக்கோ தமிழால் ஆங்கிலத்திற்கோ நன்மை செய்ய முடியாவிட்டாலும் ''இன்டர் நேஷனல் லாங்குவேஜைப் படித்த இறுமாப்பில் 'டமிலை'ப் பேசவும் வராது'' என்று ''ஸ்டைல்'' பண்ணி நாகரிகம் தேடுவதை இன்றும்

காணுங்கள். ஏன்? நம்மிடையே வாழும் மலையாளியும், தெலுங்கனும் தாய்மொழிகட்கு உரிய இடமளித்து உரிமையை நிலைநாட்டுகிருன். அதற்கும் மேலாக இந்தியைப் படிப்பதாகக் கூறி அரசியலில் ஆட்சியைக் கைப்பற்ற விரைகிருன். தமிழனே தாய்மொழிக்கு உரிய இடமளிக்க மறுத்து-சாக்குப் போக்குச் சொல்லிக்கொண்டே உரிமையைப் பறிகொடுக்கிருன். 'இந்தி'யைக் கட்டாயம் செய்தும், கவர்ச்சி காட்டியும் தமிழ் மக்களிடையே பரப்பிப் படிக்கவைத்து, மாநில ஆட்சியைக்கூட மாற்ருரின் ஆட்சிக்கு மாற்றிவிட விரைகிருன்.

○

அடிமைநோயின் அறிகுறிகள்

எலும்புருக்கி நோயால் செத்துக்கொண்டிருப்பவனுக்குப் பஞ்சுவைத்துக் கட்டிப் பட்டுச் சட்டை போடுவதால் அவன் உயிர்பிழைத்துவிட மாட்டான். அறிகுறிகளைக் கண்டு நோயின் மூலத்தையறிந்து மாற்று மருந்து கொடுக்காவிட்டால் எந்த நோயும் தீராது. மன நோயும் அவ்வாறுதான்.

தமிழனைப் பிடித்துள்ள மனநோய் அவனது சொல், செயல் ஒவ்வொன்றிலும் பிறிட்டு வெளிப்படுகிறது. நாமோ 'பட்டுச் சட்டையின்' அழகைப் பார்த்துக்கொண்டு பட்டுவரும் உடலின் தன்மையை மறந்திருக்கிறோம். ஒவ்வொரு மொழியாளனும் தன் மொழியின் ஒலி முறைக்கு ஏற்பப் பிறமொழிகளை

உச்சரித்துவரக் காண்கிறோம். ஆங்கிலேயன் தமிழை அவன் வாயசைவிற்கு ஏற்ப ஒலிக்கிறான். வட நாட்டான் அல்ல - வட நாட்டானைப் போல நடிக்கும் தமிழன் கூட "நம்பள்கி இத்தினி ரூபாய் தருராங்கோ ஐயா!" என்பது போலத் தமிழை வடவரொலி முறைக்கு ஏற்ப ஒலித்து நம்மைச் சிரிக்கவைக்கிறான். அதுபோலத் தமிழன் பிறமொழிகளைத் தன் தாய் மொழி ஒலிமுறைக்கு ஏற்ப ஒலிப்பதைத் தமிழ்நாட்டி லேனும் நீங்கள் கேட்டதுண்டா? ஆங்கிலத்தையோ, இந்தியையோ தமிழ் ஒலிமுறைக்கு ஏற்ப ஒலித்து விட்டால் அந்தந்த நாடுகளில் அல்ல, தமிழ்நாட்டி லேயே கேலிசெய்யக் கிளம்பிவிடுகிறோம் 'மொழி யறிவு' இல்லையென்று! போகட்டும், தமிழையேனும் நம் ஒலி முறைப்படி நாம் பேசலாமன்றோ? அதுவும் இடையாது. 'சமஸ்கிருதம்' படித்தவன் "ஆஷ்டுக் குஷ்டி வேஷ்டியைத் தின்குது, ஓஷ்டு ஓஷ்டு" என்று னும். இது பழமொழி. தனது 'சமஸ்கிருதப்' படிப்பை வெளிப்படுத்த வேண்டுமென அடிமைத் தமிழன் செய்த முயற்சியிலே பிறந்த அரிய ஒலிமுறை இது. இன்றுங்கூடக் கட்டத்தைக் கஷ்டம் என்றும், பதற் றத்தைப் பதஷ்டம் என்றும், 'சூடு' என்பதைச் 'ஜூடு' என்றும், 'சாமான்' என்பது 'ஜாமான்' என்றும் பேசுகின்றான் தமிழன். 'குழறுபடிக்கேஷன்', 'கவர்க்கூடு', 'கேட்வாசல்' என்று ஆங்கிலக் கலப் பையும், காந்திஜி, நேருஜி, ராஜாஜி என்று இந்திக் கலப்பையும் தமிழன் பரந்த உள்ளத்தோடு போற்று கிறான். அனைத்திந்திய வானொலியில் பிற மொழி கலந்தும் ஒலி முறை பிறழ்ந்தும் பேசுவதுடன், "பாரதநாடு" எனத் தமிழைப் பாவில் அழுத்தும்

போதும், ஓர் இசைவாணி "ஸ்வப்ரமண்ய பாரதியே" என்று தமிழைப் பிய்த்துவாங்கும்போதும் இவ்வாறே தமிழின் உயிராய ஒலிமுறை சிதைக்கப்பெறும் போதெல்லாம் "அடிமை நோயின் அறிகுறிகளையே" காண்கிறோம். திரைப் படத்தில், பொதுமன்றில், பள்ளியில், கடைத்தெருவில், புத்தகத்தில் எங் கெங்கு காணினும் தமிழின் சிதைவையே காணு கிறோம். "செவிடர்களாய்க் குருடர்களாய்" இன்னும் நாம் வாழ்வதால் இவற்றைக் கேட்கவோ, காணவோ இயலவில்லை!

o

சொத்துரிமை

நமக்கு நம் முன்னோர் தேடிவைத்த செல்வங்களிலே மிகுந்த பற்றுதல் உண்டு. நம்மிடம் கடன் வாங்கி யவன் நோய்வாய்ப்பட்டால் அவன் குடும்பத்தாரை விட நாம் அதிகக் கவலையடைகிறோம். அவன் உடல் நிலை பற்றி அடிக்கடி கேட்கிறோம். காரணம் நம் பணம் திரும்பவேண்டுமே என்பதுதான்! நம் தோட் டத்து இடத்தில் அரை அங்குலம் தள்ளி அடுத்த இடத்துக்காரன் வேலி போட்டுவிட்டால், வழக்கு மன்றம்ஏறி வாதிடுகிறோம். நம் செல்வத்தை யாரும் திருடிவிட்டால் அவனைக் கண்டுபிடித்து வழக்காடி, நீதி பெற்று-அவனைத் தண்டிக்கும்வரை நாம் உறங்கு

வதில்லை. ஒருவன் நம் பணத்தைப்பெற்றுக்கொண்டு ஏமாற்றிவிட்டால் உடனே கொதித்தெழுந்து ஒன்றுக்குப் பத்தாகச் செலவழித்தேனும் அவனைப் பழிக்குப் பழிவாங்க விழைகிறோம். காரணம், நம் பணம் போனதோடு மானமும் போகிறதே என்ற கவலை! ஆனால் நம் இனத்தவரின் - நாட்டவரின் பொதுச் சொத்தாகவும் நம் முன்னோர்கள் பன்னூறு கோடி ஆண்டுகள் பாடுபட்டுச் சேர்த்து வைத்ததாகவும் விளங்குகின்ற நாகரிகம், மொழி, பண்பாடு அனைய பொதுச் செல்வங்களை நாம் உரிமையோடு போற்றுவதில்லை. நம் சொத்துரிமை நிலைக்கவும் இந் நாட்டுரிமையும், மொழியுரிமையுமே அடிப்படை என்பதை மறந்துவிடுகிறோம்.

நாட்டையும் மொழியையும் கோட்டை விட்டு விட்டு நம் வீடு, நம் சொத்து என்றிருப்பதால் என்ன பயன்? "பெட்டியைத் திருடன் தூக்கிச் சென்றது பற்றிக் கவலையில்லை, 'சாவி' என்னிடம்தான் இருக்கிறது" என்னும் ஒரு பைத்தியக்காரன். அவனுக்கும் தமிழனுக்கும் வேறுபாடில்லை. நம் வரலாற்றை ஒருவன் மறைக்கிறான் என்று கேட்டதும் நம் மனம் நோவதில்லை. நம்மினத்தை ஒருவன் கேலிசெய்யும் போது சேரன் செங்குட்டுவனைப் போல நாம் சீறி எழுவில்லை. நம் மொழியை ஒருவன் பிழைபட எழுதும் போது நம் மனம் கரைவதில்லை. எப்படிக் கரையும்? நாமே பிழைபட எழுதியல்லவா பிறருக்கு வழிகாட்டுகிறோம். நமது நாகரிகத்தை ஒருவன் தாழ்த்திப் பேசினால், நம்மிடையே உலவுபவன்தான் முதலிற் கைதட்டி வரவேற்கிறான்! "இன்று பள்ளி விழாவிலே

'சமஸ்கிருதத்திலே' வரவேற்பு அட்டை எழுதி வைத்தார்களே, அது ஏன்?-இந்தக் கடையில் பிழையாக விளம்பரம் எழுதித் தமிழைத் தொங்கவிட்டிருக்கிருனே, முறைதாஞ? இந்தப் படத்தில் ஆங்கிலச் சொற்களை அடிக்கடி கலந்து தமிழுக்குத் தீங்கு செய்திருக்கிருனே, வசனம் எழுதியவன் யார்? தமிழன் தாஞ?-இவர் "சங்கீதத்திற்குப் பக்திதான் முக்கியம், பாஷை முக்கியமில்லை யென்று" முழுப் பூசணிக்காயை நாம் போடுகிற சோற்றிலேயே மறைத்து நம்மை ஏமாற்றுகிருரே, இவர் நம்மவரா?-இந்தச் செய்தித் தாளில் தமிழ் மொழியைப் பற்றிய செய்திகளும், தமிழறிஞர்களைப் பற்றிய செய்திகளும் முழுதும் மறைக்கப்படுகின்றனவே! அதே சமயத்தில் ஆங்கிலம், இந்தி, வடமொழி பற்றிய செய்திகட்குப் பெரிதும் முக்கிய இடமளித்து இத்தாள் வெளியிடுகிறதே! ஏன்?-இந்த இதழில் தமிழ்க் கொலையே முதற் பணியாகக் கையாள்கிருர்களே, இதற்காகவேதான் இவர்கள் தமிழ்இதழ்நடத்திப் பிழைக்கிருர்களா? அல்லது தெரியாமற்ருன் இப்படிச் செய்கிருர்களா?-இவர் 'இந்தி'யைப் பரப்புவதில் இவ்வளவு அக்கறை காட்டுகிருரே? இவருக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பு என்ன?... என்பது போல அன்ருடம் நிகழும் செயல்கள் அனைத்தையும் நாம் எடைபோட்டுப் பார்ப்பதில்லை. சொத்துரிமையிலே உள்ள அளவு மொழியுரிமையிலே நமக்குத் 'தன்னினைவு' இல்லை யென்பதையே இது காட்டுகிறது.

o

வரவு செலவு

நாம் நம் சொத்திற்கு வரவு செலவுக் கணக்கு எழுதி, பேரேடு பதிந்து, ஐந்தொகை போட்டு முடிவான ஊதியம் எவ்வளவு, இழப்பு எவ்வளவு எனப் பார்த்து மிச்சத்தை அறிகிறோம். வரவின் வழியையும் இழக்குமிடத்தையும் கண்டுபிடித்து, வாழும் நெறியைக் கடைப்பிடிக்கிறோம். "ஆக்கங் கருதி முதல் இழக்கும்" வாணிகத்தில் நாம் ஈடுபடுவதில்லை. நமது பொதுவுரிமையாம் நாடு, மொழி, இனத்திலும் இந்த மனப்பான்மை நமக்கு வரவேண்டும். இந்த நிலை, மொழிக்கு இழிவு தரும், இதை நீக்கவேண்டும் எனவும், அம்முறை மொழிக்கு வளர்ச்சிதரும் அதனைக் காக்கவேண்டும் எனவும் நம்மை அறியாமல் உணரும் ஒருணர்ச்சி நமக்கு வாய்க்கவேண்டும். இன்னார் எழுதிய நூல், இத்தகைய முறையிலே எழுதப்பட்ட நூல், இது தமிழுக்கு வரவு என நாம் கணக்கிட வேண்டும். இந்த நூலை எழுதியவர் இவரா? நூலில் இவ்வளவு பிழைபாடுகள் உள்ளனவே - இதனால் தமிழுக்கு வரவில்லை இழப்புத்தான் அதிகம் எனவும் நாம் சிந்திக்கவேண்டும். இவரது பேச்சும் எழுத்தும் கருத்தும் தமிழினத்திற்கே மாறாகப் போகின்றனவே, இவரைப் பற்றி எப்போதும் நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்ற எண்ணமும், இவரது பேச்சிற்றான் தமிழுணர்ச்சியிருக்கிறது அதற்கேற்ப இவருக்குத் தமிழறிவு வாய்க்கவில்லையே என்ற கவலையும், இவரது தமிழறிவு போற்றத்தக்கது, இவருக்கு ஊக்கங் கொடுப்பதால் தமிழ் வளரும் என்ற ஆர்வமும், இவருக்கு இத் துறையிலே அறிவும் பயிற்சியும்

அதிகம், இவரால் தமிழைப் பற்றிய இன்ன துறையை வளர்க்கலாம் என்ற ஊக்கமும் ,தமிழ் மக்களுக்கு வாய்க்கவேண்டும்.

இத்தகைய பாகுபாட்டு உணர்ச்சி வாய்த்து, பகுத்தறிவு வளர்ந்துவிட்டால் பிறகு தமிழைப்பற்றி எதையும் பேசலாம் என்ற தறுதலை எண்ணம் குறையும்; தமிழை ஆதரிப்பது போல எதிர்த்து நிற்பவர் அஞ்சுவர்; "உபதேசம்" புரிந்து ஊரைக்கெடுப்பவனும் தன் வயிற்றுப்பெருமானை வணங்கி வாழ்ந்து தாழ்ந்து சாகும் பேர்வழியும் நம் பொதுவுரிமையிலே கைவைக்க அஞ்சுவார்கள். தமிழ் வளர்ச்சியிலும் செலவினம் குறைந்து, இழப்பைக் கழித்து, மிச்சத்தை நாம் காணலாம்.

o

தந் நினைவு

நாம் சிந்திக்கும் பழக்கத்தை நிறுத்திவிட்டதும், சிதறுண்டு கிடப்பதுமே நம் தாழ்வுக்குக் காரணங்கள். எந்தக் கருத்தை எவ்வளவு மோசமான முறையில் கூறினாலும் ஆதரிக்க நாலுபேர், ஒருகூட்டம் உறுதியாகத் தமிழ்நாட்டில் உண்டு. "ஐயோ மக்கள் வத்தலாய்த் தொத்தலாய்ப் போனார்களே!" என்றாலும் ஆரவாரிப்பார்கள்; 'இப்படிப் பேசியே உலகைச் சிலர் ஏமாற்றுகிறார்களே' என்றாலும் கைதட்டி ஆரவாரிப்பார்கள். இந்தியைப் படிக்காவிட்டால் பதவி கிடைக்காது இளித்தவாயர்களாகிவிடு

வோம் என்றால் கைதட்டும் மக்கள், இந்தியுமா தமிழர் மீது திணிக்கப்படவேண்டும், இதுவரை ஏமாந்தது போதாதா என்று கேட்டாலும் ஆரவாரிக்கிறார்கள். பொதுவாகத் தமிழ் நாட்டில் தமிழை முழுமூச்சாக உழுவலன்போடு போற்றுகிறவர்களும், சிலர் வாழ்கிறார்கள்; தமிழை அழிப்பதே குறிக்கோளாய் அதற்காகப் பசப்புவதே பேச்சாய், இழிப்பதே எழுத்தாய், சூழ்ச்சியே வாழ்வாய், நஞ்சே நெஞ்சாய்க் கொண்டவர்களோ அதிகச் செல்வாக்கோடு வாழ்கிறார்கள்.

தமிழ் மக்களுக்கு மொழியுணர்ச்சி யிருக்கிறது. அவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் சட்டசபை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் பட்டம் பதவிக்கு ஆசைப்பட்டு மக்களின் நல்லெண்ணங்களைக் காட்டிக் கொடுத்துக் கைக்கூலி பெறத் துடிக்கின்றனர்; பெறுகின்றனர்!

தமிழகத்தில் பேச்சுமேடை கருத்து விளக்கம் தரவில்லை. மாறாக மற்போரை விளையாட்டாகக் காணுவது போல் மேடையிலே ஒருவரை ஒருவர் வைது இட்டும் சொற்போரைக் காணவே மக்கள் திரள்கின்றனர். இவ்வாறு தமிழின் வாழ்வையும், தாழ்வையும் ஒரே சமயத்தில் ஒரே இடத்தில் மக்கள் ஆதரித்து நேரத்துக்கு ஏற்ப நடந்துகொண்டு காலத்தைக் கழிப்பதற்கும் 'வெந்ததைத் தின்று விதி வந்து சாவதற்கும்' தந்நினைவு அற்றமையே காரணமாகும்.

o

பிற நாடுகளில்...

பிறநாட்டு மேற்கோள்

எந்த நாட்டிலும் மொழிவழிப்பட்ட சிந்தனையும் செயலும் அந்த நாட்டின் சூழ்நிலைக்கும் நேரத்திற்கும் தன்மைக்கும் ஏற்பவே அமையும். ஒன்றையொன்று பார்த்து அப்படியப்படியே பின்பற்ற நினைப்பது அறிவின்மையாகும். தமிழ் நாட்டில் இவ்வாறு பிறநாட்டு மேற்கோள் காட்டுவோர் பலராவர். ஆங்கிலத்திலே எல்லா மொழியும் கலந்துதான் முன்னேற்றம் வாய்த்தது-அது உலக மொழியாயிற்று என்பார் ஒருவர். மற்ருேர் இடத்திலே கல்லூரிக் கல்வி தாய்மொழி மூலம் போதிக்கப்பெற வில்லை என்று வருந்தித்தேடி எடுத்துக்காட்டுவார் மற்ருெருவர். இன்னும் ஒருவர் ஒரு மொழியைச் சுட்டிக் காட்டி "இந்த மொழியில் விஞ்ஞானச் சொற்களெல்லாம் உலக மொழியாகிய ஆங்கிலத்தில் உள்ளபடியே இருக்கின்றன" என்றுரைப்பார். இவ்வாறு பெருகி வரும் வாதத்தை ஏற்றுக்கொண்டால் தமிழன் கதி "கழுதை சுமந்தவன் கதை" ஒன்று உண்டே அது போல ஆகிவிடும். நம் நிலையைக் கவனித்து அதனேடு பிறநாட்டார் செயல்களை ஒப்பிட்டுப் பார்த்து அவற்றில் நமக்கு ஏற்றவற்றை எடுத்துக்கொண்டு, ஏலாதவற்றை ஒதுக்கிவிடுதற்கு நமக்கு அறிவு படைக்கப்பெற்றுள்ளது. நாமோ அதைப் பயன்படுத்துவதில்லையென முடிவு செய்திருக்கிருேம். எடுத்துக்காட்டாக 'ஆங்கிலம் உலகமொழியாகியதற்குக்

காரணம் அதில் பலமொழிக்கலப்பு ஏற்பட்டதுதான் என்றும், தமிழிலும் எல்லா மொழிகளையும் கலப்பது அதன் வளர்ச்சி கருதித்தான்' என்றும் பலர் அடிக்கடி வாதிடுகிறுர்கள். இது தமிழுக்கு முற்றிலும் பொருத்தமற்றது. மனிதனுக்கு மனிதன் வேறுபாடு உண்டு ஒருத்தி தலைமயிரில் ஈரும் பேனும் பெருகிப் புனுகு படிந்தால் தன் தலைமயிரை மழுங்க மொட்டை யடித்துக்கொண்டு உடல் நலம் பேணலாம். அதற் காக அழகான கார்நிறக் கூந்தலிலே அரும்பு தொடுத்து அணிந்துவரும் மங்கையர்கள் எல்லோ ரும் "தலையை மழுங்க வழித்துக்கொண்டு" தான் உடல் நலம் பேணவேண்டும் என்பதில்லை. அதுமட்டு மன்றி ஆங்கிலம் உலக மொழியாயதற்குக் காரணம் ஞாயிறு மறையாதவாறு உலக நாடுகள் பலவும் தம் ஆட்சியில் பெற்றிருந்த அவர்களின் ஆட்சிவிரிவும், உலகனைத்தும் வாணிகத் தொடர்பு கொண்டிருந்த தும், உலக அரசியலில் தமது சூழ்ச்சித் திறத்தால் தலைமையேற்றுப் பல ஆண்டுகள் விளங்கியதும், மொழிவளர்ப்பில் அவர்கள் காட்டிய ஊக்கமுமேயன்றி ஆங்கிலம் பிறமொழிக் கலப்பால் அவ்வாறு உலக மொழியாகிவிடவில்லை. எனவே நமக்கு 'உபதேசம்' செய்பவர்கள் விட்டுவிட்ட உலக நாடுகளின் மேற் கோள்களை நாம் தேடிக் கண்டு நமக்கு ஏற்றவற்றைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

o

ருசியாவின் மொழிக்கொள்கை

சோவியத் ருசியா இப்பூவுலகில் ஆறில் ஒருபங்கு நிலப்பரப்பு உடையது. 82 இலக்கம் சதுர மைல்கள்

அதன் பரப்பளவு. சுமார் 19½ கோடி மக்கள் அங்கே வாழுகிறார்கள். அவர்கள் பல மொழி பேசுகின்ற பல இன மக்கள். நுணுகி ஆராய்ந்தால் அங்கே 189 தேசிய இனங்கள் இருக்கின்றனவாம். சோவியத்து யூனியன் (U. S. S. R.) என்பது 16 தேசியக் குடியரசுகள் அடங்கிய கூட்டாட்சியாகும். இவற்றில் ருசியக் குடியரசு எல்லாவற்றிலும் பெரியது. அங்கே ருசிய மொழி பேசப்படுகிறது. சார் ஆட்சி இருக்கும்போது பிற எல்லாக் குடியரசுகளும் இந்த ருசிய மொழியையே பயிலவேண்டுமென்றுவற்புறுத்திக் கட்டாயப்படுத்தியது. இன்று எவ்வாறு வடநாட்டார் இந்தியா முழுதும் ஒரே நாடென்றும், இந்தியர்களே இங்கு வாழும் இனத்தார், அவர்கள் பேசவேண்டியது இந்திமொழியொன்றையே என்றும் கருதித் திட்டமிட்டு, பிற நாட்டார் மீது மொழியைத் திணிக்கவும், வாணிகத்தைக் கைப்பற்றவும், ஆட்சியில் ஆதிக்கம் பெறவும் முயலுகிறார்களோ - எவ்வாறு அரசாங்கத்தைத் தங்கள் கைப்பொம்மையாக ஆட்டுவிக்க முயலுகிறார்களோ அதுபோலவே-சிறிது அதிகமாகவுங்கூட ஒரு காலத்தில் ருசியாவில் சார் ஆட்சி நடைபெற்றது. சார் ருசியக் குடியரசின் மன்னன். எனவே பிற மொழி பேசும் மக்களும் ருசிய மொழியையே படிக்கவேண்டும் என்றும் ருசியர்களின் ஆட்சிக்கு உட்பட்ட பிற மக்களும் வருந்த வேண்டுமென்றும் அவன் கொடுங்கோன்மைப்படுத்தினான். ஆனால் ருசியக் கூட்டாட்சி புரட்சிக்குப் பின் மலர்ந்தது. சார் மன்னன் 'சடசடெனச்' சரிந்தான். புதிய ஆட்சியிலே எல்லாக் குடியரசுகளும் சமமாக நடத்தப்படுகின்றன. ருசிய மொழியைப் பிற மொழியாளர்கள் படிக்க வேண்டு

வேண்டுமென்று கட்டாயப்படுத்தவில்லை; விரும்புவோர் படிக்கலாம். அந்தந்தக் குடியரசில் அந்தந்த மொழிகளே ஆட்சி செய்கின்றன. எடுத்துக் காட்டாக உக்கிரேன் குடியரசு ருசியக் குடியரசுக்கு அடுத்த இரண்டாவது பெரிய குடியரசாகும். தனது மொழியிலேயே இக் குடியரசு நூற்றுக்கணக்கான செய்தித்தாட்களையும், ஆண்டொன்றுக்கு ஆயிரக்கணக்கான நூல்களையும் வெளியிட்டு வருகிறது. இதற்குத் தனித்தன்மை வாய்ந்த நடனமும், இசையும் உள்ளன. எஞ்சல்ஸ் என்பது செருமானியர் வாழும் மற்றொரு நகரம். இது ருசியத் துணைக் குடியரசு ஒன்றின் தலைநகரம். இங்கு ஆட்சி, கல்வி, கலை யாவும் செருமன் மொழியிலேயே நடைபெறுகின்றன. செருமானியரும் கண்டு பொறாமைப்படுமளவு இங்கே செருமன் மொழியும், கலையும் வளர்க்கப்படுகின்றன. 'பெய்க்கால்' ஏரியின் வடகரையில் உள்ள 'புரியட்டுமங்கோலியக்' குடியரசு என்பது மிகச் சிறிய பகுதி. இவர்களுக்குத் தனி மொழிகூட இல்லாமலிருந்தது. இப்போது ருசிய அரசாங்கத்தாரால் லத்தீன் எழுத்துக்கள் போதிக்கப்பட்டுப் புதியமொழி ஒன்று இவர்களுக்கு ஏற்ற வகையில் ஆக்கப்பட்டுள்ளது. அதே சமயத்தில் இந்தியாவைத் திரும்பிப் பாருங்கள். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் தமிழ் மொழி பெயர்ப்புப்படி தமக்கு வேண்டுமென்று மதுரைத் திருவள்ளுவர் கழகத் தலைவர் அதற்குரிய தொகையை அனுப்பிவைத்தாராம். அவருக்கு இந்திய அரசாங்கத்தார் இந்தி எழுத்துக்களில் எழுதப்பட்ட தமிழ் மொழிபெயர்ப்பொன்று அனுப்பியுள்ளனர். அதாவது எழுத்துக்கள் அனைத்தும் இந்தி-

தேவநாகரி எழுத்துக்கள்; சொற்களெல்லாம் தமிழ்! எழுத்துக்களை உலகிற்குக் காரண காரிய விளக்கத்தோடு உதவியதும் வடமொழியனைய பிற மொழிகளுங்கூட எழுத்தற்றனவாய் வாயளவிலே ஒலிக்கப்பட்டு வாழ்ந்த காலத்திலும் எழுதப்பட்டு இலக்கிய இலக்கணம் பெற்று விளங்கியதுமான தமிழின் எழுத்து முறையை அழிப்பதற்கு இந்திய அரசாங்கம் துணிந்துவிட்டது என்பதற்கு வேறு என்ன சான்று வேண்டும்.

ருசிய அரசு எழுத்துக்களை உண்டாக்கிக் கொடுத்து மக்களின் தனித்தேசியத் தன்மையைப் பாதுகாக்கிறது. இந்திய அரசாங்கம் உள்ள எழுத்துக்களையும் அழித்து ஒழித்து மக்களின் தனித்தேசியத் தன்மையை மறைக்க முயலுகிறது. இவ்வாறு துணிந்து இந்திய அரசாங்கம் நம் எழுத்துக்களை அழிப்பதற்குத் துணை நிற்பவர்கள் யார்? நம்மவரேயன்றோ! தமிழ்தெரிந்த, இந்திவெறி பிடித்த ஓரடிமைதானே இந்த மொழிபெயர்ப்புக்குத் துணைபோயிருக்க வேண்டும். மத்திய அரசாங்கத் தமிழகத்து அமைச்சர் ஒருவர் இந்திய மொழிகள் அனைத்தும் தேவநாகரி எழுத்துக்களாலேயே எழுதப்பட வேண்டுமென்றும் தமிழும் இந்த இழிசெயலுக்கு உட்பட்டாக வேண்டுமென்றும், தமிழை இந்தி எழுத்துக்களிலே எழுத வேண்டுமென்ற ஒரே காரணத்திற்காகத் தமிழில் உள்ள 'ரகர', 'றகர' வேறுபாடுகளையும் னகர நகர வேறுபாடுகளையும், லகர, ளகர, ழகர வேறுபாடுகளையும் ஒழித்துக்கட்ட வேண்டுமென்றும் யோசனை கூறியிருப்பது உற்றுநோக்கத்தக்கது. இவ்வாறு

பிறரடி வருடிப் பெரு வயிறு வளர்த்து, மானத்தை விற்றுப் பிழைக்க நாமே முடிவுசெய்துவிட்டோம். நாம் 'ருசியாவைப் பார்' என்று சொல்லுவதைவிட ருசியாவோடு நம்மை நாமே ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்வதே நலமாகும்.

o

போலந்து மக்கள்

"போலந்து (*Poland*) என்பது செருமனிக்கும் ருசியாவிற்கும் இடையே உள்ள நாடு. சென்ற நூற்றுண்டில் போலந்தினைச் சுற்றி நின்ற நாடுகள் அதனைப் பங்கிட்டுக் கூறுபோட்டுக்கொண்டன. அந்நாட்டு மொழியைக்கூட அம்மக்கள் படியாதபடி கொடுங்கோல் புரிந்தனர். தாயை மறவாத பிள்ளைகள் அந்நாட்டு மக்கள். அரசர் கண்ணிலும் மண்ணைத் தூவித் தாய்மொழி கற்றுவந்தார்கள்," என்று நம் நாட்டு விஞ்ஞானப் பேராசிரியை திருமதி. சு. த. இராசேசுவரி அம்மையார் எழுதிய கட்டுரை ஒன்றில் குறிப்பிடுகிருர். சென்ற நூற்றுண்டில் மட்டுமன்றி இந்நூற்றுண்டிலும் போலந்து மக்கள் பட்டபாடுகள் சொல்லுந்தரத்தவல்ல. இரண்டாம் உலகப் போரில் செருமானியர் கையில் சிக்கியபோது போலந்து மொழியை அந்நாட்டினர் கற்கக்கூடாது என்றும் செருமன் மொழியையே தொடக்கநிலை முதல் எல்லாக் கல்வி நிலையங்களிலும் கற்பிக்க வேண்டுமென்றும் ஆணை பிறப்பித்தார்கள்! ஆணை யென்ருல் என்ன......? செருமன் மொழியைப் பயிலாமல் போலந்து மகனெருவன் தாய்மொழியைச் சொல்லிக்

கொடுக்கவோ, படிக்கவோ கண்டுவிட்டால் அவனுக்குத் தூக்குத்தண்டனை!

அண்டைநாட்டு மொழிகளை நசுக்குவதிலே செருமானியருக்கு வந்த அக்கறை யாது? கணக்கின்றிக் குழந்தைகளைப் பெற்றுத்தரும் தாய்மார்க்கு அரசாங்கப் பரிசு வழங்கிய செருமானியருக்கு ஆட்பஞ்சம் இருந்தது. போர்க்கருவிகளும் ஆணவத் திமிறும் வளர்ந்த அளவிற்கு அவர்கள் நாட்டில் மக்கள் தொகை வளரவில்லை. இதனால் அண்டை நாடுகளை அடிமைப்படுத்தி அவர்கள் மொழிகளை அழித்துவிட்டு, இரண்டு மூன்று தலைமுறைகளுக்குத் தாய்மொழியைப் படிக்கவொண்ணாதவாறு கட்டாயப்படுத்திவிட்டால், பிறகு அவர்களும் செருமானியரோடு செருமானியர் ஆகிவிடுவரெனக் கனவு கண்டார்கள். ஆனால் அந்தோ, அவ்வாறு கனவு கண்டவர்கள் ஒருதலைமுறைகூட வாழாமல் மடிந்து மண்ணானார்கள்!

தமிழர்களைப் போலப் போலந்து மக்கட்கும் 'ஆயிரம் ஆண்டு அடிமை மனப்பான்மை' குருதியிலே கலந்திருந்தால் அடடே, செருமன் மொழி படிக்காவிட்டால் வேலை கிடைக்காதே என்றோ, 'பல மொழிகள் படிப்பதினால் அறிவு வளர்ச்சிதானே', என்றோ, செருமன் நாட்டாருடன் வாணிக உறவு கொள்வதற்காகவே செருமன் மொழி படிப்பதாக வாதம் செய்துகொண்டோ, செருமன் மொழியைப் படிக்கக் கூடாது எனத் தடுப்பது குறுகிய நோக்கம், மொழி வெறி எனச் சூழ்ச்சி வலை விரித்தோ அம்

மொழியைப் படித்திருப்பார்கள்; தாய்மொழியைக் கைவிட்டு அரசியலில் மேலிடத்தாரின் பிலநாட்செல் வாக்குப்பெற்று, அதனால் தாங்களும் தங்களினத்தாரும் பிறருக்கு என்றென்றும் அடிமைகளாக இருக்க வழிசெய்திருப்பார்கள். ஆனால் அவர்களிடம் விடுதலை ஆர்வமும் வீரமும் சாகாமல் இருந்தன. எனவே, செருமானியர் கொடுங்கோன்மைக்கு ஆட்பட்ட போலந்து மக்களின் கைகளிலும் வாய்களிலும் செருமன் மொழி விளங்கிய காலத்திலும் அவர்கள் உள்ளத்திலே போலந்து மொழியே வாழ்ந்தது. அதனால் இன்று அவர்கள் உரிமையுடன் வாழ்கிறார்கள். தாய் தன்னுயிர் துடிக்குங்காலத்தும் தன் சேய் வாழவே நினைப்பாள். தாய்மொழிக்கும் இவ்வியல்பு உண்டு. இதை நாம் மறந்தால் நமக்கு வாழ்வில்லை.

o

சீனரின் மொழிப்பற்று

சீனு செல்லும் இந்தியர்களைச் சீன அதிகாரிகள் அன்புடன் வரவேற்றுப் பேசினார்கள். எம்மொழியில்...? இந்தியிலன்று, இருநாட்டிற்கும் பொதுவான ஆங்கிலத்திலன்று, அவர்கள் தாய்மொழியில் பேசினார்கள்! நம்மவர்க்கு ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க இடையே மொழிபெயர்ப்பாளர் ஒருவர் இருந்தார். சீனு சென்று திரும்பிய நம் தோழர் ஒருவர் குறிப்பிடுகிறார், "அதிகாரிகளை அவர்களின் அலுவலகத்திலே ஆட்சியாளர் என்ற முறையில் நாங்கள் சந்தித்த போது அவர்களனைவரும் சீன மொழியிலேயே எங்களுடன் பேசி, ஆங்கில மொழிபெயர்ப்பாளர் மூலம்

எங்களுக்குப் புலப்படுத்தினார்கள். ஆனால் அந்தச் சீன அதிகாரிகளுக்கு ஆங்கிலம் தெரியாமல் இல்லை. நன்றாகத் தெரிந்தே இருந்தது. அவர்கள் பேச்சை மொழிபெயர்ப்பாளர் எங்கட்குத் தவறாக எடுத்துக் கூறிய இடங்களில் எல்லாம் அவர்களே குறுக்கிட்டுத் திருத்தினார்கள். இதிலிருந்து அவர்களின் நுணுகிய ஆங்கில அறிவை நாங்கள் உணர்ந்து கொண்டோம். ஆங்கிலம் தெரிந்திருந்தும் தாய்மொழியில் பிற நாட்டாருடன் பேசுவதுதான் ஆட்சியிலிருப்பவர்க்கு அழகு என அவர்கள் கருதிய தாய்மொழிப்பற்று எங்கட்கு வியப்பைத் தந்தது!" என்று. ஏன் வியப்பைத் தராது...தம் தாய்மொழி தெரிந்த மக்களிடமே பிறமொழியில் பேசியும் எழுதியும் பெருமைபெற விரும்பும் அடிமைகளிடையேயிருந்து சென்றவர்கள் வியப்படையவும் வேண்டியதுதான், சிந்தனை யிருந்தால் வேதனையடையவும் வேண்டியது தான்!

o

கிழக்கு வங்காளம்

கிழக்கு வங்காளம் பாகிஸ்தானோடு சேர்ந்துள்ளது. அங்கு வாழும் மக்களில் பெரும் பகுதியினர் மதத் துறையால் 'இசுலாமானவர்கள்' ஆயினும் மொழியால் வங்காளிகளே. வங்காளிகள் இந்தியாவின் மொழிப்பற்று மிக்க இனத்தவர்களில் முதன்மையானவர்கள். எனவே மதத்தால் பிரிந்து தனி நாட்டினர் ஆனபின்பும் அம்முசுலிம்கள் மொழியை

விட முடியவில்லை. பாகித்தான் அரசாங்கம் அந்நாட்டுப் பல்கலைக் கழகத்தில் உருதுமொழியை ஊடு மொழியாக்கிக் கல்வி கற்பிக்கத் தொடங்கியபோது அப்பல்கலைக்கழக மாணவர்கள் கொதித்தெழுந்தனர்; பெரும் போராட்டம் நடத்தி வெற்றிபெற்றனர். பாகித்தான் அரசாங்கம் உருது மொழியை ஆட்சி மொழியாக்க முயலுவதால் இன்றும் அங்கே போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது. பாகித்தான் பாராளுமன்றத்தில் உள்ள கிழ் வங்க உறுப்பினர்கள் வங்காளத்தையும் அரசியல் மொழியாக்க வலியுறுத்தி வருகிறார்கள். பாகித்தானோடு மதத்தால் இணைந்தும் நாட்டினால் ஒருமைப்பட்டும் மொழியை விட்டுக்கொடுக்கமுடியாத வங்காளிகளைப் பாருங்கள்; பிறகு, தமிழ்நாட்டில் கட்சி வேற்றுமைக்காக மொழி வேறுபாடு கருதுகிறவர்களையும் அரசியல் கொள்கை வேறுபாடுகட்காகத் தாய்மொழியை அசட்டை செய்பவர்களையும் மத வேறுபாடுகட்காகத் தமிழைவிட்டுப் பிரிந்து செல்லும் மனப்பான்மையினரையும் பாருங்கள்! உங்கள் பார்வை அறியாமைத்திரையால் மறையாமல் இருந்தால், விடுதலை ஒளி அங்கே வீசினால் உண்மையை நீங்கள் உணர்தல் கூடும்; உணர்ந்து உள்ளம் கரைதல் கூடும்; கரைந்து கண்ணீர் சிந்துதலும் கூடும். அவ்வாறு சிந்தினால் அக்கண்ணீர் இந்நாட்டுக் கறையைக் கழுவுதலும் கூடும். அன்று தான் நம்மினம் வாழுதலும் கைகூடும்!

o

நாளும் நடப்பும்

சிந்தனையும் மனப்பழக்கம்

சிந்தனை செய்வதே ஒரு தனிப் பழக்கமாகும். சித்திரமும் கைப்பழக்கம் என்பதுபோலச் சிந்தனை மனப்பழக்கமாகும். நம் வாழ்வுக்கு உயர்வு இது, தாழ்வு இது என எண்ணுவதுபோல; நமது விருப்பங்கள் பற்றி நல்லது இது, தீயது இது எனப் பிரித்தறிவதுபோல; நம் உணவு பற்றி ஆவது இது, ஆகாதது இது என ஆராய்வதுபோல, நமது செல்வத்தைப் பற்றி வரவும் செலவும் கணக்கிடுவதுபோல நாடு மொழி இனம் அனைய பொதுச்சொத்து, பொது உரிமை, பொது உறவு இவற்றிலும் உயர்வு தாழ்வை, அழிவு ஆக்கத்தை நாம் கணக்கிட வேண்டும். மரம் இன்றிக் கிளைகள், பூக்கள், காய்கனிகள் இல்லை. அடிமரம் பட்டால் அனைத்திற்கும் நாசம் என்று பொருள். எனவே நம் அனைவருக்கும் மொழிவழிச் சிந்தனைகள் மிக இன்றியமையாதன.

o

தமிழ்வழிச் சிந்தனை

நடக்கும்போதே மேடுபள்ளங்களை அறிந்து தன்னியல்பாக வழிநாடி நடைபோடும் காற்பழக்கம் போல, தமிழைப் படிக்கும்போதே நன்றுதீது ஆயும்

கண் பழக்கமும் தமிழை ஒலிக்கும்போதே தமிழொலி பிறவொலி கூர்ந்தறியும் செவிப்பழக்கமும் தமிழுக்கு வாழ்விது, தாழ்விது என நடுநிலை நெஞ்சத்தோடு பிறர் தூண்டுதலின்றியே ஊன்றி ஆராயும் மனப் பழக்கமும் நமக்கு வாய்க்கவேண்டும். முதலில் தமிழ் மக்களின் கண் திறக்க வேண்டும்—கல்விக் கண் பெறாத மனிதன் கண்ணிருந்தும் குருடனே. செவி யாற் கேட்டுச் சிந்திக்கும் பண்பற்றவனுக்குச் செவி யிருந்தாலும் அவன் செவிடனே. ஆம், வள்ளுவம் சொல் லும் வழியில் வாழ்ந்து நூற்றுக்குத் தொண்ணூற்று ஒன்பது பேராக உள்ள தமிழரின் கல்விக் கண்களைத் திறக்கப் பாடுபடுவதே இனி நம் குறிக்கோளாக இருக்க வேண்டும். அப்போது தான் 'சில மாற்றுந்தாய் மனப்பான்மையினர்' அரசியல் செல்வாக்காலும் ஆணவத்தாலும் தமிழுக்குக் கேடே சூழும் நிலையைக் கண்டும் பலர் தம் அறிவின்மையாலும் அடிமை மன நோயாலும் அதற்கு ஒத்துழைத்துவரும் இன்றையத் 'தற்கொலைத் தமிழ் நாடகம்' நிற்பதற்குவழி பிறக்கும். இந்நாடகத்தைக் கண்டும் வாழ்வுக்காக அஞ்சி வெளியே சொல்லாமலே தமிழ்ச் சான்றோர் பலர் 'கண் மூடித் தவம் செய்யும்' நிலையும், அப்போதுதான் நம்மைவிட்டு நீங்கும்.

o

செய்தித் தலைப்பு

தமிழ்ச் செய்தித் தாளை ஒருநாள் பார்த்துக் கொண்டிருந்தேன். அன்றையச் செய்தித் தலைப்பில் முதன்மையானது 'நஜிமுதீன் டிஸ்மிஸ் செய்யப்பட்

டார்' என்பது. நஜிமுதீன் விலக்கப்பட்டார் என்றால் செந்தமிழ் ஆகிவிடும் என்று போலும் ஆசிரியர் 'டிஸ்மிஸ்' என்ற சொல்லைக் கொட்டை எழுத்துக்களிலே போட்டிருந்தார். 'டிஸ்மிஸ்' என்பது போல 'விலக்குதல்' என்ற தமிழ்ச் சொல்லுக்கு அழுத்தம் இல்லையென ஆசிரியர் நினைத்திருக்கலாம். சொற்களுக்கு அழுத்தமும் ஆக்கமும் வலுவும் நலிவும் வாழ்வும் தாழ்வும் நாம் பயன்படுத்துவதைப் பொறுத்ததே. இது மொழிநூன் முடிபு. அவ்வாறிருக்கத் தமிழ்ச் சொற்களைப் புறக்கணித்துப் பிற சொற்களைப் பயின்று வருவோமானால் நம் மொழி உயர்வது தான் என்றோ?

'குதிரை அக்ர ஸ்தானத்தில் வந்தது'. 'ஸ்வானமும் ஹாஸ்யத்தை ரஸித்தது'. 'ஸர்வகலாசாலையில் உப அத்யட்சர் உபந்யாசம்'. 'முனிசிபல் கமிஷனர் உத்யோகம்—மாகாண சர்வீஸாக்க சர்க்கார் பரிசிலனை'. 'தமிழக மஹா புருஷர்களில் சிரேஷ்டரான ஸ்வாமிநாதய்யர் தமிழ் பாஷை அபிவிருத்தி பற்றிச் செய்துள்ள ஸேவைகள் ஸ்பஷ்டமானவை' என்பது போல ஒவ்வொருநாளும் தமிழ்ச் செய்தித் தாள்களில் காணப்படும் பிறமொழிப் புகுத்தல்களையும், திணிப்புக்களையும் கவனித்தால் எவ்வாறு மலையாளம், கன்னடம், தெலுங்கு அனைய பலமொழிகள் தமிழிலிருந்து பிறந்து, பிரிந்தன என்பது நமக்குத் தெற்றெனப் புலனாகும். இதை வளரவிட்டால் இப்போது தமிழிருக்கும் இடமும் இருந்த இடமே தெரியாமல்போக, வடமொழி கலந்ததோர் அவியல்மொழி புதிதாகப் பிறக்கவுங் கூடும்!

○

" தேசபக்தன் " வ. உ. சி.

பாரதியார் காலத்தில் வாழ்ந்தவர் வ. உ. சி. பாரதியின் பாடல்கள் பலவற்றுக்குப் பொருளாக இலங்கியவர், பாரதியாரைப் பாடுமாறு அடிக்கடி வலியுறுத்தி ஊக்கம் காட்டிய அருந்தமிழ்ப் பெரியார் களிலே ஒருவர் வ. உ. சி. அன்னார் ஆங்கிலேயனோடு வழக்கு மன்றில் வாதாடிய செய்தியைக் கருவாகக் கொண்டு பாரதியார் இரு அரிய பாடல்களை எழுதி னார். பாரதியார் பாடல்களின் முதற் பதிப்பில் அவ்விரு பாடல்களின் தலைப்புக்களாகத் "தேச பக்தன் வ. உ. சி. ஆங்கிலேயனுக்குச் சொல்லியது"- " ஆங்கிலேயன் தேசபக்தன் வ. உ. சி.க்குச் சொல்லி யது"-என்று அச்சேறியிருந்தது. மறு பதிப்புக்களில் 'வ. உ. சி.' பெயரை எடுத்துவிட்டார்கள். இவ்வாறு தமிழ்ப் பெரியார்களையும் பேராசிரியர்களையும் கவிஞர் களையும் புறக்கணிக்கும் பழக்கம் நம் நாட்டு நூலாசிரி யர்கட்கும் செய்தித்தாளாசிரியர்கட்கும் தொற்று நோயாய்ப் பற்றிக்கொண்டுவிட்டது. இவ்வாறு நாமே நம்மைப் புறக்கணிப்பதால் தான் 'இந்திய விடுதலை வரலாற்றைத்' தொகுக்கும் இந்திய அரசாங்கம் கட்டபொம்மன் வரலாற்றைக் கைவிட்டுவிட்டது. இந்திய முதல் அரசாங்கக் கப்பலுக்கு 'வ.உ.சி' பெயர் இடப்படவில்லை. தென்னாட்டு விடுதலை வீரர்களைக் கூடப் பிறர் மதிக்கவில்லை. நம்மை நம்மவரே புறக் கணிக்கிறார்கள்; பிறரும் புறக்கணிக்கிறார்கள். இத னால் யாரையும் குற்றங்கூற வழியறியாது, கொடுமை அறிந்த நெஞ்சம் கொதிக்கிறது.

o

'உளேன் ஐயா!'

'*Present Sir*' என்று வருகைப் பதிவின்போது சொல்லுவது தமிழ்நாட்டு மாணவர் வழக்கம். இப்போது 'உளேன் ஐயா' என்கிறார்கள். இதைக் கேட்டு, வெறுத்து 'உளேன் ஐயா' என்று சொல்லும் மாணவர்களை 'உதைக்கக்' கிளம்புகிறார்கள் தமிழ்நாட்டு ஆசிரியர்கள். இந்தி ஆசிரியர் 'ஜி ஹாங்' என்று தும்மச் சொல்லுகிறார். இதனால் தமிழ்நாட்டு மாணவன் தமிழ் ஆசிரியர் வகுப்பில் 'உளேன் ஐயா' என்றும் இந்தி ஆசிரியர் வகுப்பில் 'ஜி ஹாங்' என்றும் வடமொழி வகுப்பில் 'ஆஜர்' என்றும் சொல்லுகிறான். அடிமைப் புத்தியை பள்ளிப் பருவத்திலேயே புகட்டும் நாம் 'விடுதலை வீரர்களாக'க் காட்சியளிப்பதும் விந்தைதான்! அமரிக்கா, ருசியா, இங்கிலாந்து, வங்காளம் அனைய நாடுகள் எங்கேனும் அந்நாட்டு மாணவர்கள் ஆளுக்கு ஒரு மொழியில் வணக்கம் சொல்லுகிறார்களா, அன்றித் தாய்மொழியில்தான் சொல்லுகிறார்களா என்பதை அறிந்துகொள்ளுதல் நமக்கு மனநலம் தரும்.

○

கழகக் கூட்டம்

ஆசிரியர் கழகக் கூட்டத்திற்குச் சென்றேன். அங்கே ஒருவர் வடமொழியில் கடவுள் வாழ்த்துப் பாடினார். கல்லூரியில் ஒரு பெருந் தலைவர் பேசிய கூட்டமொன்றுக்கும் சென்றிருந்தேன். அங்கும் கடவுள் வாழ்த்தாக வடமொழியைக் கேட்டேன். எதிரே ஆயிரக்கணக்கில் தமிழர், தலைவரோ தமிழர்

களுக்கே தலைவர், பேசுவதோ தமிழில் - இக்கூட்டத்திற்குப் பிறமொழிக் கடவுள் வாழ்த்தே பெருமை தரும் என நினைத்தனர். தமிழனின் இச்செயல்கண்டு அவனது 'பரந்த மனப்பான்மையைப்' பாராட்டுவதா அல்லது இழிந்த நிலையை எண்ணி இடித்துக்கூறுவதா? என நான் திகைத்தேன். திகைத்து வருந்தியதைத் தவிர்த்து வேறொன்றும் நான் செய்தேவில்லை. செய்திருந்தால்தான் என்னைப் 'பாஷைத் துவேஷி' என்றிருப்பார்களே!

o

உதிரித் தமிழ்ப் பண்டிதர்!

"தமிழில் நாடகங்களே சூன்யம் என்பது அநேகமாகஎல்லோரும் ஒப்புக்கொண்ட விஷயம். சில உதிரித் தமிழ்ப் பண்டிதர்கள் மட்டும் 'நாடகங்கள் தமிழில் ஏராளமாய் இருந்தன. அவற்றைக் கடல் கொண்டுபோய்விட்டது' என்று கடலரசன்மேல் பழியைப்போடுகிறார்கள்"- இவ்வாறு தமிழில் எழுதியே உயிர் வாழும் ஒரு 'நண்பர்' தமது கட்டுரையில் குறிப்பிடுகிறார். திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை தமிழில் நாடகம் தோன்றி வளர்ந்தமை பற்றித் தக்க ஆதாரங்களோடு விளக்கியிருக்கிறார். ஆனால் "நாடகங்களே சூன்யம்" எனக் கூறித் தமிழைத் தாழ்த்தும் நண்பருக்கு ஆராய்ச்சியறிவு 'சூன்யம்' என நாம் கூறவில்லை; திரு. எஸ். வையாபுரிப்பிள்ளை அனைய பேராசிரியர்களின் ஆய்வுரையே பதில் கூறும். 'உதிரித் தமிழ்ப் பண்டிதர்கள்' என்ற இச்சொல் நடையே என் மனங் கவர்ந்தது. ஏனெனில் இதன்

மூலம் இவருக்குத் தமிழ்ப் புலவர் மீது உள்ள வெறியும் பண்டிதர்கள் உதிரியாக இருப்பதால்தான் இவர் தலையெடுத்து ஆட்டம் போடுகிருரென்பதும் தமிழ்ப் பண்டிதர்கள் உதிரிகளாக இல்லாமல் ஒற்றுமையாக இருந்திருந்தால் தமிழில் 'நாடகங்களே சூன்யம் என நெஞ்சழுத்தத்தோடு எழுத இவர் எண்ணியிருக்க மாட்டார் என்பதும் எனக்குப் புலனுயின!

o

'வள்ளுவ தாஸர் விருது!'

தமிழர்கள் நூறுயிரக் கணக்காக வாங்கிப் படிக்கும் 'வார இதழ்' ஒன்றைப் புரட்டிக்கொண்டிருந்தேன். 'வள்ளுவ தாஸர் விருது' என்ற தலைப்பு என் கண்களை ஈர்த்தது. திருவள்ளுவரைப்பற்றிய பக்திக் கட்டுரை போலும் எனப் படிக்கத் தொடங்கினேன். அதில் "வள்ளுவர் என்ற பெயர் 'வள், வள்' என்று எல்லோரிடமும் கடுமையாகப் பேசியதால் ஏற்பட்ட பெயரா?" என்றிருந்தது. 'திருக்குறள் என்பது சரியா? திருக்குரல் என்றிருக்க வேண்டுமா?' எனக் கேள்வி கேட்கப்பட்டிருந்தது. "வள்ளுவர் எழுதிய நூல்: (1) டொயின் நூல் (2) கர்னூல் (3) பட்டு நூல் (4) நீதி நூல் - இதில் எது சரி?" என்ற கேள்வியும் கண்டேன். வள்ளுவரை அவமானப்படுத்தும் இக் கட்டுரையை 'நையாண்டிக் கட்டுரை, 'ஹாஸ்யப் பொக்கிஷம்' என வருணித்திருந்தார் ஆசிரியர், தம் குறிப்பில்! கட்டுரையின் கடைசியில் அருமைக் குறள்கள் 'கிறள்கள்' ஆக்கப்பட்டிருந்தன. அவற்றில் ஒன்று 'நன்றிமறப்பது நன்று; நல்லுதவியை

அன்றே மறப்பதும் நன்று,'' என்பது. இக்குறளுக்கு இதன் ஆசிரியரும் அவருடைய இனமும் இதை வெளியிட்டவருமே சிறந்த எடுத்துக் காட்டாவர் என்று நாம் கூறக்கூடாது; கூறினல் நம்மைக் 'குறுகிய மனப்பான்மை' உடையவன் 'பாஷை வெறியன்' என்பார்கள். நமக்கு அவர் மீது வருத்தமில்லை. தமிழ் நாட்டார் தமிழைப் புறக்கணிப்பவர்களைத் தாம் புறக்கணிக்கக் கற்றுக்கொண்டால் அன்று அவர் திருந்திவிடுவார். பிறகு 'வள்ளுவ தாஸர் விருது' எழுதமாட்டார். அறிஞர் மு. வ. வின் 'வள்ளுவர் வாழ்க்கை விளக்கம்' பற்றியாவது அறிஞர் வ. சுப. மா. வின் 'வள்ளுவம்' பற்றியாவது சிறப்புரை எழுதித் தமக்குச் சிறப்பும் பொருளும் தேடிக்கொண்டிருப்பார்.

o

தமிழிசை படும்பாடு

பேசும் மொழியிலே பாடும் இசையிருந்தால் தான் பொருள் புரியும், கடவுளன்பு வளரும் என்பது ஒரு பெரிய உண்மை; இயற்கை தரும் பாடம்; மனிதனின் இயல்புணர்ச்சி! இதை மாற்றிச் சென்னையின் முன்னுள் அமைச்சர் பேசினர்: "சங்கிதத்தில் பாஷை அதிமுக்யமானதல்ல...... சங்கிதத்திற்கு உயிராக விளங்குவது பக்தி சிரத்தை. ஒரு குறிப்பிட்ட மொழியில் பரிச்சயம் உள்ளதினல் சங்கிதத்தை அவர் அனுபவித்துவிடுவாரென்று கூறமுடியாது.

பல சங்கிதக் கச்சேரிகளை அனுபவித்துக் கொண்டிருக்கிற அநேகருக்கு சாஹித்யத்திலே உள்ள ஒரு

வார்த்தைக்குக்கூட அர்த்தம் தெரியாது. சில வேளை களில் வித்வான்களுக்குக்கூடத் தெரியாது! இக் காரணத்தினால் அவர்களுடைய அனுபவமும் ரஸனை யும் குறைந்துவிடாது. ஆகையால் இந்த இசையை வைத்துக்கொள்ளலாமா, அந்த இசையை வைத்துக் கொள்ளலாமா என்ற பிரச்னைக்கு ஆதாரமே கிடை யாது"—(12-8-55) என்று. 'சங்கீதத்திற்குப் பாஷை' முக்கியமில்லை என்பவர் தமிழ் 'பாஷை' யை விட்டுத் தெலுங்கு 'பாஷை'யை மட்டும் ஆதரிப்பதும் விந்தைதான். தம் கூற்றைக் கேட்டுத் தமிழர்கள் ஏமாறுவர் என இவர் இன்னமும் நம்புகிறார். அவர் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நம்மவர்களும் சிலர் 'விளங்கு' கிறார்கள்!

"தமிழைத் தவிர இதர பாஷைகளில் பாடப் படும் சங்கீதத்தை ரஸிக்க மறுக்கும் எண்ணமே அறிவு நிதானமுள்ளவர்களுக்குத்தோன்றாது. தமிழர் கள் பிற பாஷைப் பாடல்களைக் கேட்க மறுக்கும் அசட்டுத்தனத்தைச் செய்யமாட்டார்கள் என்று நம்பு கிறேன். சங்கீதத்திற்குப் பாஷைதான் முக்கியமென்று சொல்ல முடியாது. நாதமே முக்கியம்", இவ்வாறு பேசியவர் இந்தியத் தலைமை நீதிபதியாக நேற்று வரை இருந்தவர். இவரிடம் 'இது நீதியா' எனக் கேட்கும் துணிச்சல் தமிழர்களில் எவருக்குமே இல்லை. கேட்டால்தான் 'பாஷைத் துவேஷி' ஆக்கி விடுவார்களே என்ற பயம் கோழைகட்கு!

'சங்கீதப் பக்ஷியைப் பாஷைக் கூண்டில் அடைப் பதாக'க் கேலிப்படம் போட்ட ஓர் வார இதழையும்

தமிழர்கள் பொறுமையோடு ஆதரிக்கத்தான் செய்கிறார்கள்.

o

தமிழரின் தனிப்பெருந் தலைவர்

"இன்னும் கொஞ்சநாள் போனால் தமிழைத் தவிர வேறு எந்த மொழியில் பாடினாலும் கேட்பதற்கு ஆள் இருக்கமாட்டார்கள்; அத்தகைய காலமும் விரைவிலேயே வந்துவிடும். ஒவ்வொரு துறையிலும் மறுமலர்ச்சி ஏற்படும்போதெல்லாம் முன்பே வசதிபெற்றவர்கள் ஆட்சேபிப்பது இயற்கையே. எனினும், மக்களின் எழுச்சியினால் ஏற்படும் கொள்கைகளுக்கு மதிப்புக் கொடுக்காவிடில் ஆதிக்கம் தகர்ந்துவிடும்", என்று மக்களின் தலைவர் திரு. காமராசர் கூறுகிறார். இதைக் கேட்குங்கால் தமிழ் உள்ளங்கள் எழுச்சி பெறுகின்றன. சில பின்னோடிகளே தொடை நடுங்கித் தமிழையும் தமிழகத்தையும் கைவிடத் துணிகின்றனர். திரு. காமராசர் 'நடுநிலை பிறழ்வதில்லை; அவ்வாறு பிறழ்பவரை விடுவதுமில்லை' என்ற தம் குறிக்கோளை நிலைநாட்டிவருகிறார்.

o

நிதானமிழந்தவர்கள்

தமிழ்நாட்டுச் செய்தித் தாட்களில் அரசியல் தலைவர்களும் நீதிமான்களும் அன்றாடம் பேசிய பொழிவுகளைப் படிப்பதுண்டு. அவற்றில் சிலவற்றின் தலைப்புக்களையே இங்கே தருகிறேன்: 'தமிழை ஆட்சிமொழியாக்குவதில் நிதானமாக நடக்க...யின்

புத்திமதி!'. 'ஆட்சிமொழி ஆகாமல் வளரவும் தமிழுக்குப் பலமுண்டு என......யின் அறிவுரை". "குழந்தைகளுக்கு வற்புறுத்தி இலக்கணம் கற்பிக்க லாகாது" என......யின் கண்டிப்பு. இவ்வாறே தமிழர்களை ஏமாளிகள் எனக் கருதி நாள்தோறும் சில ஏடுகள் வெளியிடும் செய்திகளையும் அச் செய்தியை உரைத்தார்; அவருக்கு உரியார், உறவினர்கள் யாரென்பதையும் தமிழ்நாட்டு மாணவர்களாவது உற்றுநோக்கி உணர வேண்டும். அப்போதுதான் தமிழுணர்ச்சியுள்ளவர்கள் நிதானமிழந்தவர்களா? அல்லது தமிழையே அழித்து ஒழிக்க வேரிலே வெந்நீர் ஊற்றி வருபவர்கள் நிதானமிழந்தவர்களா? என்பது புலப்படும்.

o

திரைப் படங்கள்

தமிழ் நாட்டுத் திரைப் படங்கள் தமிழை அழித்து வருகின்றன. பெயரிலே சிதைவு, உரையாடலிலே சிதைவு, ஒலி முறையிலே சிதைவு எனக் கணக்கிலடங்கா. ஔவையார் பெயரால் கதை தொடுத்து அதில் ஔவையார், திருவள்ளுவர் இருவரின் மானத்தையும் கெடுத்துத் தமிழ்ப் பண்பாட்டையே அழித்து ஒழிக்கும் முரணான காட்சிகளைக் காட்டிப் படமெடுக்கும் துணிவும் சிலருக்கு இருந்தது.

"*Be Happy, Be Jolly, Be Cheerful*" இது ஒரு தமிழ்ப் பாட்டின் தொடுப்பு. இவ்வாறே திரைப்படப்

பாடல்களில் புகுந்துள்ள ஆங்கில, சமசுகிருத, இந்திச் சொற்கள் ஆயிரம், ஆயிரம்!

ராமச்சந்தர், சுந்தர், இராம்னாத், நாராயண் என வரும் பெயர்ச் சிதைவுகளிலே தமிழ் ஒலிமுறையும் தமிழுக்குத் தாளனைய விகுதிகளும் அழிந்தொழிந்து போயிருக்கும் விதங்களைத் திரைப் படத்தார் பெயர்களிலே காணுகிறோம்.

'காண்' சொல்லடியாகப் பிறந்த காட்சி என்ற சொல்லைக் 'காக்ஷி' என விளம்பரப்படுத்தாத பட மாளிகைகளே தமிழகத்தில் இல்லையெனலாம்! போதாக் குறைக்கு 'டப்பிங்' வேறு. இம்முறையால் தமிழை இழுத்தும் குறுக்கியும் நீட்டியும் நெகிழ்த்தும் பிய்த்துச் சுக்குநூறாக்கியும் ஒலித்து, அழித்து வருகிறார்கள். இதைக்கண்டு மகிழ்ந்து ஆரவாரிக்கிறார்கள் தமிழ் மக்கள்! என்னே, இவர்களின் நகைச்சுவையின் திறம்!

தமிழில் 'இதழ்ப் பொருத்தம்' செய்யப்பட்ட ஆங்கிலப் படமொன்று தமிழ்நாட்டில் வெற்றிகரமாக ஓடியபோது அதற்குத் திறனுரை எழுதிய பிலிம் இந்தியா (*Film India*) என்ற ஆங்கிலத் திரைப்பட இதழ், "தங்கள் தாய்மொழி சின்னாபின்னமாக்கிச் சித்திரவதை செய்யப்படுவதைக் கேட்டு அனுபவித்து, கைகொட்டி ஆரவாரித்து வரவேற்று மகிழும் நகைச்சுவை உணர்ச்சியுடைய இனத்தாரைத் தமிழகத்தில் தவிர வேறு எங்கும்காணமுடியாது" என்று எழுதியிருந்தது. அக்கூற்றை இன்றும் மெய்ப்பித்து

வருகின்றனர் நமதருமைத் தமிழினத்தார்! இதைக் கண்டு கொதிப்பதைவிடச் சேர்ந்து சிரித்துவிட்டால் போதுமெனப்படுகிறது; சிறிதளவாவது வேதனை மறையுமல்லவா; அதனால்!

o

'உபதேசம்'

ஒருநாள் ஆங்கில நாளிதழ் ஒன்றைப் பார்த்துக் கொண்டிருந்தேன். தலையங்கப் பக்கத்தில் குசராத்திப் பல்கலைக்கழகத்தினர் குசராத்தி மொழியையே 1955 சூன் முதற்கொண்டு பல்கலைக் கழகப் போதனை மொழியாக மாற்றியமைத்தனர் என்பதும் குறிப்பிட்ட கலைகள்பற்றிய பாட நூல்கள் அச்சாகி வெளிவர இரண்டு மாத காலமாகும் என்றாலும் அதுவரை காத்திராது, குறிப்பிட்ட கல்வியாண்டு தொடங்கிக் குசராத்தியே பாடமொழியாகுமெனக் கண்டிப்பாக அறிவித்துவிட்டனர் என்றும் செய்தி வெளியாகியிருந்தது. அதை ஆர்வத்தோடு படித்து முடித்துவிட்டுத் தலையங்கத்தைப் படித்தேன். சென்னை மாநிலக் கல்வியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் தலைமையில் கல்வி நிபுணர்கள் கூடிப் போதனை மொழியாகத் தமிழை மாற்றுவது பற்றிப் பேசிய மாநாட்டின் முடிவுகளை ஆராய்வதற்காக எழுதப்பட்டது அத் தலையங்கம். அம்மாநாட்டில் தமிழை ஆட்சிமொழியாக்க வேண்டும் என்றும் ஆக்கக்கூடாது என்றும் தமிழர்களே ஆங்கிலத்தில் வாதிட்டுச் சரியான முடிவுகட்கு வராது, 'இதுபற்றிப் பின்னர்ச் சிந்திக்கலாமெ'ன்ற

ஒரே முடிவுக்கு வந்திருந்தனர். இருந்தும் அவ்வேடு "தமிழை ஆட்சிமொழியாக்குவதில் மிகவும் 'நிதான' மாக நடந்துகொள்ளவேண்டும். விரைவில் ஒரு முடிவுக்கும் வரக்கூடாது. ஏனெனில் 'இது பொது அறிவால் சிந்திக்கவேண்டிய ஒரு செய்தி. உணர்ச்சி வயப்படக்கூடாது' (*It is a matter for Common sense; not for sentiment*) என 'உபதேசம்' செய்திருந்தது. குசராத்தி மொழி பற்றிய செய்தியையும் தலையங்கக் கருத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தேன். தவறுபுலப்பட்டது. செய்திக்கோப்பாளரும், தலையங்கமெழுதிய இதழாசிரியரும் ஒருவரை ஒருவர் கலக்காமல் செய்ததால் ஒரே பக்கத்தில் குசராத்தி மொழியினர்க்கு உயர்வும், தமிழ் மொழியினர்க்கு 'உபதேசமும்' கிடைத்திருக்கின்றன என உணர்ந்தேன். 'உபதேசி'கள் மீது எனக்கு வருத்தமில்லை. இன்னும் 'உபதேசம்' கேட்கக் கண்ணை மூடிக்கொண்டு உட்கார்ந்திருக்கின்றவர்களையும், கேட்ட பிறகு தம் பொதுவுரிமைக்கே ஊறு தேடுகிறவர்களையும் நினைத்துத்தான் நான் வருந்தினேன்.

o

கையெழுத்து

12–9–'55 அன்று வெளிவந்த தமிழ் நாளிதழ் ஒன்றில் 'மக்கள் குரல்' என்ற பகுதியில் ஆந்திராவில் கல்வி பயிலும் தமிழ் மாணவர் எழுதிய கடிதமொன்று வெளியிடப்பெற்றிருந்தது.

'ஐயா, சென்னை மந்திரி... அனந்தபுரம் வந்திருந்த பொழுது இங்கு நல்ல வரவேற்புக் கொடுக்கப்பட்டது. அவர் தமிழில் பேசுவார் என்று எதிர்பார்த்தோம். ஆனால் மந்திரி......ஆங்கிலத்தில் பேசினார். பின்னர் அங்குள்ள மாணவர்கள் மந்திரி......யிடமும் ஆந்திர முதன் மந்திரியிடமும் கையெழுத்து வாங்கினார்கள். ஆந்திர முதன் மந்திரி கோபாலரெட்டி தெலுங்கில் கையெழுத்துப்போட்டுத் தன் மொழிப் பற்றைக் காட்டினார். ஆனால் மந்திரி...அவர்களோ ஆங்கிலத்தில்தான் கையெழுத்துப்போட்டார். தமிழர்களாகிய எங்கள் மனம் இதைக்கண்டு வருந்தியது. அண்ணாத்துரை, காமராசர் ஆகியோர் போல மந்திரி......யும் தமிழில் கையெழுத்துப் போட்டால் என்ன கெட்டுவிடும்? தமிழன் என்று சொல்லிக்கொள்வதில் தயக்கம் எதற்கு? —"ஒரு தமிழன்", அனந்தபுரம்.

இக் கடிதத்தைப் படித்தபோது பலதுறைகளிலும் தமிழுக்கு ஏற்றம்தருவது சரியென உணர்ந்த பிறகும் தயக்கங்காட்டும் மனப்பான்மை நம்மில் பலரிடம் இருப்பதனால், எண்ணம் செயலாகாமலே நம் மொழி இழிவு அடைவதை எண்ணினேன். இனியும் தயங்காது 'கொக்கொக்க கூம்பும் பருவத்து, மற்றதன் குத்தொக்க சீர்த்தவிடத்து' என்ற குறளுக்கு எடுத்துக்காட்டாக நாம் வாழவேண்டும்.

o

தமிழிலே ஆட்சி!

திருச்சி மாவட்டத்தில் தமிழிலே ஆட்சி நடத்திய அரசாங்கம் 'மன நிறைவு' அளிக்கவில்லையெனக்

கூறித் தமிழாட்சியை மற்ற மாவட்டங்களுக்கும் புகுத்தாமல் 'விதான'த்தை மேற்கொள்கிறது. இத்தகைய சூழ்நிலைகளில்தான் தமிழ் நெஞ்சம் உணர்ச்சிவயப்படுகிறது. இந்திமொழி ஆட்சிக்குப் பொருந்தாது என்று சொல்லக் கூசுகிறவர்கள்-இந்தி மொழி ஆட்சிசெய்யும் ஏற்றத்தைச் சிறிது சிறிதாகப் பார்த்துக்கொண்டுவரும் நம்மவர்கள் 'தமிழிலே ஆட்சி நடத்தினால் வெற்றி அளிக்குமா' என ஆராய்ந்து, இப்போது இயலாது என்று நாணாமல் வெளியிடவும் செய்கிறார்கள். திருச்சியில் *Engineer* என்பதை மாற்றிப் பொறியர் என முகவரி இட்ட கடிதம் ஒன்று உரியவரைச் சேரவில்லையாம். இது ஒரு குறையாம். இது தமிழின் குறையோ? தமிழன் குறையோ? எனச் சிந்திக்க வேண்டும். சிந்தித்தால் தமிழனிலே போலித் தமிழனும் இருப்பது புலப்படும்.

o

நாலடியார் ஒரு கவிஞர்!

தமிழ் மக்களில் பெரும்பாலானவர் உழவர்களாய், தொழிலாளிகளாய், எளியோராய்க் கல்வி அறிவு இன்றி இருப்பதே தமிழ்நாட்டில் தலைதூக்கி நிற்கும் தீய "சக்தி"கள் பலவற்றுக்கு மூலகாரணமாகும். நம்மினத்தவன் கல்வியறிவும் உலகப் பொது அறிவும் பெற்றுவிட்டால் பிறகு இங்கே தமிழை அசட்டைசெய்பவன் அஞ்சுவான்; காட்டிக்கொடுப்பவன் கவலைப்படுவான்; ஆட்சியாளன் மக்கள் குரலை மதித்து நடப்பான். உண்மையான குடியாட்சி அன்றுதான் உருவாகும்.

சென்னை முன்னாள் அமைச்சர் ஒருவர் ஒரு சிறிய புத்தகத்திற்குத் தாமெழுதிய முன்னுரையில், "கம்பர், நாலடியார், திருவள்ளுவர் எனப் பெருங் கவிஞர்கள் வாழ்ந்த நாடு இது" என எழுதியிருந் தார். நாலடியாரையும் ஒரு கவிஞராக்கிவிட்ட அவ ருக்கு எவ்வளவு தமிழறிவு என நாம் வியப்படை கிறோம்! அமைச்சர்கள் மட்டுமென்ன, கல்வியறிவற்ற காரணத்தால் நம் மக்கள் தேர்ந்தெடுக்கின்ற சட்ட சபை உறுப்பினர்கள், மத்திய அரசின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் 'தமிழறிவு' என்றால் வீசை என்ன விலை? என்று கேட்பவர்களாகவே உள்ளனர். வெறும் அரசியலறிவே ஒருவர் அமைச்சராகப் போதுமென இந்நாட்டார் முடிவு கட்டுகின்றனர். இத னால் ஆட்சியாளர்களுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பு மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட்ட கதையாகி விடுகிறது.

o

எத்துணை அன்பு!

'தமிழை ஆட்சிமொழியாக்குவதும் சரியே' என ஒரு நாளிதழ் தலையங்கம் எழுதியிருந்தது. அத் தலையங்கத்திலே பாதி வடமொழி ஆட்சி செய்தது, காற்பங்கு இந்தியும், ஆங்கிலமுமே இடம்பெற்றன. மீதமுள்ள காற்பங்கும் பிழைபட்ட தமிழாக இருந் தது. இத்தகைய உருவில், தமிழ் ஆட்சி மொழி யாவதைவிடச் சிலர் 'உபதேசி'ப்பதுபோல 'நிதான புத்தியை'க் காட்டுவதே மேலெனப்பட்டது எனக்கு! மேலும் தமிழின் மீது கொண்ட உள்ளன்பால் அவ்

வாசிரியர் சில வழிதுறைகளும் கூறியிருந்தார், அவற்றுள் தமிழை ஆட்சிமொழியாக்க ஒப்பற்ற ஓர் 'உபதேசம்' இதோ: "ஜமாபந்தி, கலெக்டர், தாசில்தார், தாலூகா, ஜில்லா, அஜிமாயிஷ், பேஷ் குஷ், வக்காலத்து, பிராது, தாவா, நமூனு, ஷரா, முன்சீப், சிரஸ்தார், சிவாய்ஜமா"-என இவையும் இவற்றைவிட நம் வாயிலும் கருத்திலும் நுழையாத பல "பாஷை"ச் சொற்களும் தமிழில் அப்படியே இருக்க வேண்டுமென்றும், இவற்றை மாற்றித் தமிழாக்கினுல் தமிழர்கள் சொற்களுக்குப் பொருள் புரியாமல் திண்டாடுவார்கள் என்றும் 'கண்ணீர்' விட்டு எழுதியிருந்தது அவ்விதழ். ஜில்லாவை 'மாவட்டம்' என மாற்றினர், 'பிராது' என்பதை 'வழக்கு' என மாற்றினர் - இவ்வாறு தமிழாக மாற்றிய சொற்களுக்கு நமக்குப் பொருள் புரியவில்லையாம், திண்டாடுகிறோமாம், எனவே நமக்காகக் கண்ணீர் விடும் 'ஆசிரியர்' இச்சொற்களனைத்தையும் அப்படியே வைத்துக்கொள்ளுங்கள் என்று 'உபதேசம்' புரிகிறார். இத்தகையவர்களின் 'உபதேசத்தை' நம்பும் தமிழர்கள் உள்ளவரை இவர்கள் வாழ்க!

o

இளங்கோ யார்?

மத்திய அரசினர் தமிழ்த்துறைபற்றிச் செய்யும் இருத்தொண்டுகளுக்குத் துணைபோகும் தமிழர்கள் எத்தகையவர்கள், எவ்வளவு தமிழறிவு உடையவர்கள் என நாம் அறிந்துகொள்ள வேண்டும். இந்திய அரசாங்கச் செய்தி வானெலித்துறையின் வெளியீட்

டுப் பிரிவினர் இயற்றிய தென்னிந்தியாவிற்கு வழி காட்டி (*Guide to South India*) என்ற ஆங்கில நூலில்,

"சிலப்பதிகாரம் ஒரு பாண்டிய அரசனுல் தமிழில் எழுதப்பட்ட புகழ்வாய்ந்த நூல்". என்று தமிழறியாதவர்களுக்கு 'வழிகாட்டி' யிருக்கிருர்கள். இந்திய அரசினரின் தமிழன்பையும், அவர்களுக்கு எனத் 'தமிழ்த் தொண்டர்கள்' வேலைக்குக் கிடைப்பனேயும் தமிழகத்தார் நினைத்து நினைத்து உருகுகிருர்கள். ஏன் தெரியுமா? தமிழகத்திலிருந்து சட்ட சபை உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர் எனச் செல்லுபவர்களும் தமிழகத்தைக் காட்டிக்கொடுத்து 'மேலே' உள்ளவர்கட்கு நல்ல பிள்ளைகளாக நடந்து பட்டம் பதவி தேடுகிருர்கள். இங்கிருந்து அலுவலர்களாக, ஆட்சியதிகாரிகளாக வெளியுலகில் சென்று வாழ்பவர்களும் தமிழைக் காட்டிக்கொடுத்து மேற் பதவியடைகிருர்கள். இவ்வாறு குடியாட்சி முறை 'காட்டிக்கொடுக்கும்' படலமாக நடைபெறுவதை ஒவ்வொருநாளும் நீங்கள் தெளிவாகக் காணலாம்

o

தாகூரும் காந்தியடிகளும்

காந்தியடிகள்

காந்தியடிகளைப் பின்பற்றும் இன்றையப் பெரியார் பலர் அவருடைய மொழிப் பற்றுதலையும் உணர்ந்துகொள்ளுதல் நாட்டுக்கு நலம். ஏனெனில் காந்தியடிகள் போரால் இந்தியைப் புகுத்துவோர் தாய்மொழிகளை மதிக்க மறுக்கும் ஆணவக்காரர் களாகவோ, தாய்மொழியை நசுக்கியேனும் நலம்பெற விரும்பும் அடிமைகளாகவோ விளங்குவதைக் காண் கிறோம். இதோ காந்தியடிகளின் பொன்மொழிகள்! இவற்றைத் தமிழ்த் தந்தை திரு. வி. க. எழுதிய 'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்' என்ற நூலில் நீங்கள் காணலாம்.

"ஆங்கிலம் பயின்றவர்க்குக் குசராத்தி மொழி (காந்தியடிகளின் தாய்மொழி) நிறைவிலா மொழி போலத் தோன்றும். இதற்குக் காரணம் என்ன? ஆங்கிலத்திலிருந்து குசராத்தி மொழியில் பெயர்த் தெழுதும்போது தோன்றும் அருமைப்பாடே-குறை மொழியிலில்லை. அக்குறை மொழிபெயர்க்கும் கட னேற்கும் மனிதன் பாலதே."

"தாயின் அமுத மொழியால் பெற்ற பயிற்சி, அந்நிய மொழி வாயிலாகப் பயிற்சி தரும் பள்ளிக் கூடத்தில் இல்லாமற் போகிறது. பள்ளிக்கூட வாழ்வையும் வீட்டு வாழ்வையும் பிணைத்துள்ள பாசத்தை அறுக்கிறவன் நாட்டின் பகைவன். இத்தகைக் கல்வி முறையில் நாம் விழ்ந்துகிடப்பதால் தாயை வஞ்சித்தவர்கள் (மாத்ரு துரோகிகள்) ஆகிறோம்."

"கலெக்டர்களும் மற்ற உத்தியோகஸ்தர்களும் குசராத்தி (தாய்மொழி) தெரிந்தவர்களாயிருக்கிறார்கள். தெரிந்தும் ஆங்கிலத்தில் நம்மனோர் கொண்டுள்ள வேட்கை அவர் தாய்மொழியில் பெற்ற அறிவைத் துருப்பிடிக்குமாறு செய்கிறது."

"ஆங்கிலத்தில் பயிற்சிபெறல் வேண்டும் என்னும் நம்பிக்கை நம்மை அடிமைப்படுத்திவிட்டது."

"தாய்மொழிகள் நசுக்கப்படுவது காண என்னால் பொறுக்க முடியவில்லை."

இத்துணைத் தாய்மொழியன்பு கொண்டவர் உலகப் பெரியார் காந்தியடிகள். ஆனால் அடிமைத் தமிழன் அன்றே அவரிடம் தன் குணத்தைக் காட்டினான். 'மாயவரம்' என அழைக்கப்படும் ஊருக்குக் காந்தியடிகள் முதன்முறை எழுந்தருளியபோது அவண் அவர்க்கு அளிக்கப்பெற்ற வரவேற்பு அறிக்கைபற்றித் தமது விடையில் அவர் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டார் :

"வரவேற்பு ஆங்கில மொழியில் பொறிக்கப்பட்டிருத்தல் காண்கிறேன்... ஆங்கில மொழிக்கு மாறுக

ஒன்றும் யான் சொல்வதற்கில்லை. நீங்கள் உங்கள் நாட்டு மொழிகளைக் கொன்று, அவைகளின் சமாதியின் மீது ஆங்கிலத்தை நிலவச் செய்வீர்களாயின், நீங்கள் நன்னெறியில் சுதேசியத்தை வளர்ப்பவர்களாக மாட்டீர்கள் என்று சொல்வேன். எனக்குத் தமிழ் மொழி தெரியாதென்று நீங்கள் உணர்ந்தால் அம் மொழியை எனக்குக் கற்பிக்கவும் அதனைப் பயிலுமாறு என்னைக் கேட்கவும் வேண்டும். அவ்வினிய மொழியில் அறிக்கை அளித்து, அதை மொழி பெயர்த்து உணர்த்தியிருப்பீர்களாயின் உங்கள் கடனை ஒருவாறு ஆற்றினவர்களாவீர்கள்.''

மேலும் ஓரிடத்தில் பேசுகையில், ''தாய்மொழியின் வழி, பிள்ளைகட்குக் கல்வி பயிற்றல் மிக முக்கியமானது. தாய்மொழியை அவமதிப்பது தேசியத் தற்கொலையாகும்'' என்றும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இன்று ஆங்கிலம் படுத்திய கொடுமைகளைத் தொடர்ந்தாற்ற இந்தி முயலுகிறது. ஆனால் காந்தியடிகள் இன்று இல்லை. அவர் பெயரைக் கூறித் தாய்மொழிகட்கு மாறாக அவரே பேசியதாகவும் கூறி நம்மை ஏமாற்ற ஆட்களிருக்கிறார்கள், தலைவர்களாக! இந்த ஆபத்திலிருந்து தமிழை 'அறிவுள்ளவர்கள்' காப்பாற்ற வேண்டும்; இல்லையேல் ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும்!

o

கவியரசர் தாகூர்

'வங்கம் போல வளர்ப்பீர் தாய்மொழி' என்பார்கள். கவியரசர் தாகூர் தாய்மொழிப் பற்றின் ஊற்றாக

விளங்கினர். அவரது வங்கமொழிப் பாடலிலே தவழ்ந்த விடுதலை ஆர்வம் எத்தகையது தெரியுமா? இன்று அந்த வங்க மொழிப் பாடலையே இந்தியத் தேசியப் பாடலாகக்கொள்ளும் அளவு சிறப்புப் பெற்றது, அது. அவருக்கே 'நோபல் பரிசை' வாங்கித் தந்து உலகக் கவிஞராக்கியது, அந்த ஆர்வம். 'தமிழன் பண்பு' - தாய்மொழியைப் புறக்கணிக்கும் பண்பாடு தாகூரிடமும் தலைநீட்டாமலில்லை!

திரு. சுத்தானந்த பாரதியார் கவியரசர் தாகூரைப் பார்க்கப்போன சுவை மலிந்த செய்தியொன்றைத் தமது 'தாகூர்' பற்றிய நூலில் வெளியிட்டுள்ளார்:

"மதுரையில் அவரை (தாகூரை)க் காணும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. மதுரையில் அவர் மேஜர் கணபதிராய் வீட்டில் தங்கியிருந்தார். நண்பர் சிலர் அவரைப் பார்க்கச் சென்றிருந்தோம். நானும் நண்பரொருவரும் ஆங்கிலத்தில் கவிமாலை பாடிச் சென்றோம். நண்பர் ஆங்கிலத்தில் மகா மேதாவி. நன்ருகப் பாடுவார். தாகூருக்குத் தமிழ் வராது. ஆகையால் நமது புகழ்மாலையை ஆங்கிலத்தில் சூட்டுவோம் என்றே நான் எண்ணினேன். எங்களை அவர் புன்னகையுடன் வரவேற்ருர். நமது நாட்டுக் கலை விஷயமாகப் பேசினர். பிறகு, 'தகுந்த புலவர் கிடைத்தால் தமிழுக்கும் சாந்திநிகேதனில் ஒரு பவனம் அமைக்கலாம்' என்ருர். அச்சமயம் என் நண்பர் தமது புகழ்மாலையைத் தந்தார். தாகூர் பார்த்து, "இந்த மாதிரி தங்கள் தாய்மொழியில்

பாடினால் நன்றாயிருக்குமே. நம்மவர் தாய்மொழியை மறந்து, பிழைப்புக்குக் கற்ற அன்னிய மொழியில் கவி பாடுவது பொருத்தமில்லாத வழக்கம். இந்தியர் சுதேச பாஷைகளை வளர்க்க வேண்டும். எனது வங்க ஹிருதயம் வங்கத்திலேயே பாடும். தமிழ் ஹிருதயம் தமிழிலேயே பாடுவது நல்லது. குயிலுக்குத் தன் பாட்டுத்தான் பொருத்தமாகும். குயில் கிளியை அபிநயித்தல் பொருந்தாது," என்றார். இம்மொழிகளை அவர் புன்னகையுடன் தாடியை நாலுதரம் உருவிக் கொண்டு சாந்தமாகவே சொன்னார். உடனே, எனது கவிதையைப் பைக்குள் திணித்துக்கொண்டேன். தாகூரின் தாய்மொழி அன்பு எனக்குப் புதிய எழுச்சி தந்தது. அவர் வங்கத்திலேதான் எதையும் எழுது கிறார். பிறகு ஆங்கில மொழிபெயர்ப்பு நடக்கிறது... தாந்தேயைப் படிக்க இத்தாலியம் கற்பதுபோலத் தாகூரைப் படிக்க உலகம் இனி வங்கம் பயிலும். தாகூரால் வங்க மொழி உலக மொழிகளில் தகுந்த இடம் பெற்றுவிட்டது. வங்கம் ஒரு மாகாண மொழி யாயிருந்தது. தாகூர் அதை உலகமொழி யாக்கினார். வங்க வாணியால் அவர் பாரத மாதாவை உலகிற்கு விளக்கினார்."

இச்செய்தியைப் படித்தேனும் தமிழர் திருந்து தல் வேண்டும். சான்றோர் சென்ற வழியில் செல்லு தற்கு அஞ்சுவானேன். எதையும் குறைசொல்ல, தடுக்க யாரேனும் சிலர் என்றும் இருக்கத்தான் செய்வார்கள். அதற்காக அஞ்சி அறநெறியை மறத்தல்தான் பெருந்தீது.

காந்தியடிகளுக்கும் முதலில் குசராத்தி, பிறகு இந்தியா, அதன் பிறகு இவ்வையகம் என்ற முறையான பற்றுதலேற்பட்டது. அதனால் அவர் உலகத் தலைவரும் ஆனார். கவியரசர் தாகூருக்கும் முதலில் வங்கம், பிறகு இந்தியா, அதன் பிறகு இவ்வுலகம் என்ற முறையான பற்றுதலே விளைந்தது. அதனால் அவர் உலகக் கவிஞரும் ஆனார். நமக்கும் முதலில் தமிழ்நாடு, பிறகு இந்தியா, அதன் பிறகு உலகமென்ற முறையான பற்றுதலே உருவாதல் வேண்டும். அன்றே உலகில் நமக்கு இடமுண்டு. இன்றேல் நாமும் அழிவோம்; நம் நாடு மொழி இனமும் மறைந்தொழியும்.

o

வாழும் வகை

கடமையுணர்ச்சி

தமிழ் மொழி உலகத் தொன்மை உடைய இலக்கணச் செம்மை வாய்ந்தது, உலக நாகரிகத்திற்கு ஊற்றுக் கண்ணாகத் திகழ்வது-நம் தாயாகவும் விளங்குவது. நாம் தமிழ்த்தாயின் மக்கள். எனவே

நாம் நன்றியுடையவர்களாகத் திகழக் கடமைப்பட்டிருக்கிறோம். நாம் தமிழை வளர்ப்பதும் காப்பதும் நமக்காக மட்டுமல்ல. தமிழின் இயல்பை நாம் உலகறியச் செய்தால் போதும். அன்று, பேரறிஞர் பெர்னுட்ஷா தம் மொழியாம் ஆங்கிலத்தின் ஒலி முறையிலும் இலக்கணத்திலும் காண விரும்பிய திருத்தங்கட்குத் தமிழ் வழிகாட்டும்; இந்திய மொழிகட்கும் பழக்கவழக்கங்கட்கும் நாகரிகத்திற்கும்பெரும் பங்கு ஆற்றிய தமிழின் நாகரிகச் சிறப்பைத் தமிழரல்லாதாரும் போற்றுவர். இந்தியப் பாராளுமன்றத்தில் நிதியமைச்சர் தேசுமுக் அவர்கள் திருக்குறளை எடுத்துக்காட்டிப் பேசுவது போல, உலக அமைதியை விரும்பும் ருசியத் தலைவர் புல்கானின் அனைய பிற நாட்டுப் பெருந் தலைவர்களும் குறளறத்தை-வள்ளுவத்தை மேற்கோள் காட்டிப் பேசுவர். அமரிக்கரும், பிரெஞ்சுக்காரரும், அனைத்துலக நாட்டினரும் தமிழ் கற்றுத் தெளிய இங்கே வருவர்.

நம் கடமையெல்லாம் இவைதாம்: தமிழை நம் நாட்டில் சிதையாமல் பாதுகாக்க வேண்டும்; பிற நாட்டார் அதன் தொன்மையைச் சிறப்பை அறிய வழிசெய்ய வேண்டும். இவ்வளவும் அது நம்தாய், மொழி யென்பதற்காக மட்டுமல்ல-அது உலக மொழி, உலக நாகரிக ஊற்றாக விளங்கும் மொழி, மொழிக்குரிய நல்லியல்பெல்லாம் பொருந்திய மொழி, பிறபல மொழிகட்கும் வழிகாட்டும் மொழி என்பதற்காக!

o

புகழ்ந்ததெல்லாம் போதும் !

தாயின் சிறப்பைக் கூறினேன். உடனே புகழப் புறப்படும் நம் மக்களின் தோற்றம் என் கண்முன் எழுகிறது. புகழ்வதால் ஒருயிர் வாழ்வதில்லை. 'தமிழ் வாழ்க' என மனத்தொடுபடாமல் உரக்கக் கூவுவதால் அது வாழ்ந்து விடாது. இதுவரை தமிழைச் சிதைத்தோரே அதனை 'அதிகம்' புகழ்ந்துள்ளனர். 'ஓங்காரத்தி லிருந்து வந்தது தமிழ்' 'முதலையுண்ட பாலகனை மீட்டது தமிழ்' 'அடைத்த கதவைத் திறந்தது தமிழ்' 'நீரிலே எதிர்த்து நீந்தியது தமிழ்' 'நெருப்பிலிட்டும் வேகாதது தமிழ்' என்றெல்லாம் தெய்வத்தன்மையை வீணே ஏற்றித் தற்பெருமை பேசித் தருக்கித்திரிவதைக் கண்டால் நாம் அருவருக்கவேண்டும். 'இனிய தமிழ், கன்னித் தமிழ்,' 'என்றுமுள தென்றமிழ்' என்றெல்லாம் தமிழைப் பாராட்டுவதில் தவறில்லை. ஆனால் தமிழைப் பழிப்போரிடமும் தமிழறியாரிடமும் பிறநாட்டு மக்களிடமும் இப் பாராட்டுக்கள் பயன்படும். நாமோ தமிழை வளர்க்கும் வழி தெரியாமல், அன்றாட வாழ்விலே அதற்கு உரிய இடமளிக்கும் ஆண்மையும் அற்று, எழுத்தைச் சிதைத்தும் மொழி நடையைக் கொன்றும் மரபை அழித்தும் அரைகுறைப் புலமையால் தமிழை அல்லற்படுத்தி வருகிறோம். அத்துறைகளில் தீதறிந்து களையாமல், நன்றறிந்து போற்றாமல் 'இனிய தமிழ், கன்னித் தமிழ், தேன்தமிழ்' எனப் பலபடப் பாராட்டிய வண்ணம் இருக்கிறோம். இவ்வாறு பாராட்டத் தகுதியுடையோர் நம் முன்னோரே.

அவர்கள் தமிழை இனிமையுடையதாக வைத்திருந்தனர்; கன்னித் தமிழின் இளமைப் பொலிவைக் காத்துவந்தனர்; என்றும் தமிழ் நின்று நிலைக்க நன்றே புரிந்து நாடொறும் வளர்த்தனர் - ஆனால் அவர்களின் பாக்கடலுள் தமிழைப் பாராட்டிப் பெரிதுரைக்கும் வரிகளை நான் கண்டிலேன். நாம் வெறுமனே பாராட்டுதலே அன்றி, பயன்பட வாழத் தெரியாதவர்களாக இருக்கிறோம்.

'பயிரின் அழகு பாரீர், பசுமை பாரீர், அது பயன் தரும் பாரீர்' என உழவன் பாராட்டிக்கொண்டிருந்தால் 'கதிர்மணிகள்' அவன் களத்திற் குவிந்துவிடா! பயிரின் அழகைப் பருவநிலை மாற்றக் கூடும், நீர் பாய்ச்ச மறந்தால் பசுமை காயக்கூடும், வேலியிடாவிட்டால் மாடுகளும் மேயக்கூடும். பிறகு பயன் தரும் என்று அவன் எண்ணியிருந்த எண்ணமும் பாராட்டுக்களும் பயனற்றுப் போகக்கூடும் அல்லவா? மொழியையும் அந்நிலைக்கு ஆக்க வேண்டாம் என வேண்டுகிறேன்.

o

பகைமை வேண்டாம்

தமிழைத் தமிழர்களே ஊறுசெய்து வாழும் முறையை நாம் முன்னர்க் கண்டோம். அதற்காக நமக்குள்ளே பகைமையை வளர்த்துக் கொள்ளுதல், பொறுமையால் ஒருவரை ஒருவர் தூற்றி அழிதல் கூடாது. ஒருவரை ஒருவர் தகுதியறிந்து தயங்காமல் போற்றி வாழுதல் வேண்டும். தீய பகைமை நம்

குடும்ப உறவைச் சிதைக்கும். ஒவ்வொருவனும் தன் கடமையைச் செய்ய முனைந்தால் பகைமைக்கே இடமில்லை. அதனால் தெரியாதவர்களும் திருந்த ஒரு வாய்ப்பு ஏற்படும். தெரிந்தும் தமிழுக்குத் தீங்கு செய்பவர்கள் இருந்தால் அவர்களோடும் நாம் ஏன் பகைத்துக்கொள்ள வேண்டும்? நம் மக்களுக்கு ஆர்வம் உண்டாகும் வகையில், அறிவு உண்டாகும் வகையில் நாம் சொல்லிக் காட்டியும் எழுதிக் காட்டியும் எல்லாவற்றுக்கும் மேலாக நடந்து காட்டியும் பழக்கிவிட்டால் பிறகு 'தீயவர்கள்' இந்நாட்டில் என்செய இயலும்? தீயவர்களைச் 'செயலற்றவர்களாக' ஆக்குவது அவர்களைப் பகைத்துக்கொள்வதால் ஒரு நாளும் ஆகாது; நம் மக்களைத் திருத்துவதால்தான் விரைவிலே ஆகும்.

தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் இன்று தம்தம் அளவில் திருந்தியவர்களாக விளங்கினாலே போதும்-தமிழ் வளரும். "நான் தமிழைப் பிழைபடக் கண்டால் வருந்துகிறேன், நானே பிழைபட எழுத நேர்ந்தால் என் குற்றமறிந்து கண்ணீர்விடுகிறேன். தமிழ்த் துறை அறிஞரைக் கண்டால் தலைதாழ்த்த விரைகிறேன். நானும் தமிழறிஞர் வரிசையிலே சேர்ந்து விட்டேன் எனத் தருக்கித் திரிய அஞ்சுகிறேன். ஒன்றுபடா மனத்தவர்களைக் கண்டாலும் ஒன்றுபடும் வழியே நாடுகிறேன், ஒற்றுமைக்குத் தீங்குதரும் வழியில் நான் செல்ல நேரிட்டால் நெஞ்சம் நோகிறேன். உண்மையில் தமிழறிந்த-தமிழ் நெஞ்சமே வாய்த்த பெரியோர்களையே நான் பாராட்டுகிறேன். நஞ்சு நெஞ்சினராய்த் தமிழை நலியவைப்போர் எவரா

யினும் அவரை அரசும் பிறரும் வாழ்த்தினுலும் நான் புறக்கணிக்கிறேன். தமிழை முதலாகக்கொண்ட செய்தித்தாளேயே நான் வாங்குகிறேன். தமிழ்ப் பற்றுடையாரே என் நண்பர்கள், தமிழார்வம் உடைய கடைகள் முதலியனவே எனக்குப் பழக்கமானவை, தமிழை வாழ்வாகக் கொண்ட அரசியலும் கட்சியுமே என்போற்றுதலுக்கு உரியவை, தமிழை மறவாத உறுப்பினர்களேயே நான் சட்டசபைகளுக்கும் பாராளுமன்றத்திற்கும் தேர்ந்தெடுத்து அனுப்புவேன், தமிழைக் காக்கும் ஆக்கத்தைக் கதையோடும் கவிதையோடும் கொண்டுவரும் திரைப்படங்களேயே நான் பார்க்கச் செல்லுகிறேன், தமிழ் மொழியில் அறிவும் பற்றுமுடைய பிற கலைத்துறை ஆசிரியர்களை நான் போற்றுகிறேன்......" என்று இவ்வாறெல்லாம் ஒவ்வொரு தமிழனும் உறுதிகொண்டு வாழத் தொடங்கிவிட்டால் பிறகு 'பகைமை'க்கு நேரம் ஏது? அந்தப் பகை இங்கே நிலைக்க 'இடம்' தான் ஏது?

o

புதிய துறைகள்

தமிழ் வளரவேண்டிய - தமிழுக்கே புதுமையான துறைகள் ஒன்றல்ல, ஓராயிரம் உள்ளன! உலக நாகரிக வளர்ச்சி வேகத்தின் முழுப்பங்கிற்குக் காற்பங்கு அளவுகூடத் தமிழ்மொழி வளரவில்லை. இவற்றைக் கண்ணெடுத்தும் பாராமல்தான் நாம் இன்னும் 'தமிழ் வாழ்க' எனக் கூவியதோடு அமைகிறோம். 'எப்படி வாழும்?' என எதிர்க்குரலும் கேட்கிறது, இங்கே!

விஞ்ஞானக் கலையைத் தமிழிலும் கற்கும் வாய்ப்பு வரவேண்டும். பிற அறிவியல், உளவியல், பொருளியல், அரசியல், விலங்கியல், நிலவியல், வானியல், பூதவியல், பொறியியல், மின்சார இயல், தொழிலியல் அனைய பல கலைகளெலாம் தமிழில் வர வேண்டும்; வளரவேண்டும். இன்று நம் கல்லூரி மாணவர்கள் பயிலும் அரசியல் (*Politics*) பொருளியல் (*Economics*) அனைய பல கலைகள் பற்றிய பெரு நூல்களை வடநாட்டுப் பேராசிரியர்கள் எழுதியுள்ளனர்; அதே ஆசிரியர்கள் அதே நூல்களை அப்படியே தம் தாய்மொழியாம் இந்தியிலும் எழுதி வைத்துள்ளனர், பயன்தரும் காலம் விரைவில் வருமென்று. ஒரே நூல், ஆங்கிலப் பதிப்பு பதினைந்து ரூபாய்; இந்திப் பதிப்பு பதின்மூன்று ரூபாய். எது வேண்டும்?" என விளவுகின்றனர். தமிழுக்கு இந்நிலை வாய்ப்பது எப்போது?

○

ஓருடல், ஓருயிர்!

தமிழகத்தார் அனைவரும் எம்மதத்தினராயினும் எக்கட்சியினராயினும் எச்சார்பினராயினும் எவ்வளவு பகையினராயினும் எங்கிருந்தாராயினும் எம்மொழி கற்றாராயினும் தமிழரென்ற நினைவு வருங்கால் ஒருயிரில் இயங்குகின்ற ஓருடல்போல் உணர்ச்சிபெறவேண்டும். தேவிகுளத்தில் தமிழனுக்கு வாழ்வில்லை யென்றால் சென்னைத் தமிழன் வருந்தவேண்டும். மதுரையில் தமிழன் ஒருவன் மாற்றானுக்குத் தாய்நாட்டைக் காட்டிக்கொடுத்து ஆற்றிய சொற்பொழிவைக் கேட்

டதும், சிங்கப்பூர்த் தமிழன் ஏற்றங்கொள்ள வேண்டும். மலேயாத் ' தமிழ்நேசன் ' இதழிலே வந்த கட்டுரையில் மாட்சிமைமிக்க தமிழுக்கு மேலுமோர் புதிய ஆராய்ச்சியுரையும் அரும்பணியும் இருத்தல் கண்டு-அல்லது கேள்விப்பட்டு திருச்சித் தமிழன் மனமுவந்து போற்றவேண்டும். தில்லி வானெலியார் தமிழைச் சிதைத்தொலிக்கக் கேட்டால் இலங்கைத் தமிழனின் காதுகள் இன்னலுற வேண்டும். சிங்கப்பூர் வானெலியில் தேன்தமிழ் அதற்குரிய சிறப்போடும் மதிப்போடும் ஒலிபரப்பப்படுவது கேட்டுக் கோவைத் தமிழனுக்குக் களிப்புப் பெருகவேண்டும். இலங்கைத் தமிழனின் ஒலியினிமையும் பாண்டிய நாட்டுத் தமிழ்ப் பேச்சின் பொருளமைதியும் ஒன்றுபட வேண்டும். காங்கிரசுத் தமிழன் தமிழைக் காக்கப் புறப்பட்டால் திராவிட இயக்கத்துத் தமிழன் கட்சியை மறந்து 'அந்த நேரத்தில்' ஒன்றுபட வேண்டும். திராவிட இயக்கத்தவர் தமிழுக்காக-அதன் உயர்வுக்காக உயிர் கொடுக்க முன்வந்தால் 'அந்த நேரத்தில்' மொழி அனைவருக்கும் பொதுவாதலால்-காங்கிரசுத் தமிழன் உயிர் வாங்குவோனாக மாறாமல் தானும் அத் தியாகத்திற்கு முற்பட வேண்டும். பொதுவுடைமைத் தமிழன் தமிழிலக்கியத்தைப் பாராட்டிப் பேசினால் தமிழரசுக் கட்சி நண்பன் அதைக் கேட்டு மகிழவேண்டும். இந்து மதத்தவன் தமிழிலே அருச்சனைசெய்தால் கிறித்தவ மதத்தினனும் அதைப் பின்பற்றவேண்டும். உன் மதத்திற்கு வடமொழியா, எனக்கு உருது, இவனுக்கு ஆங்கிலம் என இந்துவைப் பார்த்து முசுலிம் கூறி விட்டுக் கிறித்தவனைக் கேலிசெய்வது தமிழ் வளர்ச்சி

யாகாது. தமிழராகப் பிறந்தவர் மனமனைத்தும் ஒன்றுபடுத்தும் ஓர் ஊடு இழையாய்த் தமிழ் விளங்க வேண்டும்; உயிர் அறுந்தாலும் அவ்வொற்றுமை இழை அறுதவாறு உறுதியும் பண்பும் நமக்கு வாய்க்க வேண்டும்.

o

தந்நல மறுப்பு

எல்லாவற்றுக்கும் மேலாகத் 'தன்னலம் பாதி, தமிழ் நலம் பாதி' என்ற மனப்பண்பு இயல்பாக வேண்டும். சிலர் தமிழ் நலத்திற்கே வாழ்வதாகக் கூறுவர், அது பொய் - ஏனெனில் தன்னலம் மறுப்பவன் அதை வெளியே கூறவும் வெட்கப்படுவான். தமிழ் நாட்டில் வாழும் நாம் ஆள்வோர்க்கு அஞ்சியும் பட்டம் பதவிகளைத் தேடியும் தந்நலத்தால் அலைகிறோம்; தமிழையே சிதைக்கிறோம். தமிழால் ஆயிரம் ஆயிரம் ஊதியம் வாங்குபவர்கள் தமக்கு அவ் வூதியம் தரும் அரசு, ஆட்சியாளர், மேலிடத்தார் அனைய பலர்க்கு அஞ்சித் தமிழைக் கைவிடத் துணிகின்றனர். தமிழில் செய்தித்தாள் நடத்துவோன், தமிழ்மொழியைக் கற்பிக்கும் ஆசிரியன், தமிழென்று சொல்லியே பிழைப்பு நடத்துவோன் அனைவரும் தமிழுக்கு நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும். ஒரு பேராசிரியரையோ, ஆட்சியாளரையோ மதிப்பிடும்போதும் ஒரு செய்தித்தாளையோ, ஒரு இலக்கிய இதழையோ கணக்கிடும்போதும் "தன்னலம் எவ்வளவு? தமிழ்நலம் எவ்வளவு?' எனக் கணக்கிட்டு எது மிகுதியோ அதன்பால்

அதனைச் சேர்த்து நாம் போற்றுதலும் புறக்கணித்தலும் செய்தல் வேண்டும். இதற்காக முற்றிலும் தன்னல மறுப்பையும் நாம் எதிர் பார்க்கக்கூடாது; ஒருவர் முழுதும் தமிழ் நலம் மறுக்கவும் விடக்கூடாது.

o

கண் தருக!

மனித வாழ்வும் தாழ்வும், மொழி நலமும் கேடும், பொருள் வரவும் இழப்பும், புகழ் வளர்வும் தேய்வும் அனைய பலவும் ஒரு நாட்டு மக்களின் கல்வியறிவைப் பொறுத்தன. "நோய் நாடி நோய் முதல் நாடி" என வரும் வள்ளுவம்போல நமது நாட்டின் இன்றைய நலக்கேடுகட்கு எல்லாம் மூலகாரணம் எதுவென ஆராய்ந்தால் இறுதியில் அது நம் மக்களின் கல்வியின்மையில் போய் முடியும்.

தமிழ்நாட்டில் தமிழுக்குப் பகையான செய்தித்தாட்களே நூறாயிரக் கணக்கில் அழிகின்றன. காரணம் என்ன? மக்கட்கு முதலாவதாக மொழியறிவு இல்லை. மொழியறிவு பெறக் கல்வி வசதி

வேண்டும். அதிலும் தாய் மொழிக் கல்வி பயிலுதல் வேண்டும். நம் நாட்டில் நூற்றுக்கு நூறுபேர் கல்வியறிவு பெற்று ஓரளவு தமிழ் படித்திருந்தாலும் போதும், அவர்கட்கு உடனே தெரியும் தமிழ் எது? பிறமொழி எது? என்று. பிறகு அவர்களை வலியுறுத்தினாலும் தமிழ்க்கொலை புரியும் இதழ்களைக் காசு கொடுத்து வாங்கமாட்டார்கள். தங்கள் செல்வாக்குக் குறையுமென்று தெரிந்தால் தமிழைச் சிதைக்கவும் அவ்விதழ்கள் துணியா!

நம் நாட்டு அமைச்சர்கள், அரசியல் உறுப்பினர்கள் பலர் தமிழறிவு வாய்த்தவர்களாகவோ, தமிழ்ப் பற்று உடையவர்களாகவோ இல்லை. காரணம் என்ன? அவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய பெரும்பான்மையான மக்கட்குப் பணத்தின் அருமையும் தன்னலத்தின் அருமையும் தெரிந்த அளவு தமிழார்வமோ, தமிழறிவோ இல்லை என்பதுதான். இதற்கும் கல்வி யறிவு இன்மைதான் காரணம்.

நமது இலக்கிய வளர்ச்சியில் நேர்மைக்குச் சிறப்பும் திறமைக்குப் பாராட்டும் புலமைக்கேற்ற போற்றுதலும் இல்லை. காரணம் மக்கட்குக் கல்வியறிவு இன்மையே. இவ்வாறு நம் நலிவிற்கும் பலபடக் கூறப்படும் 'உளநோய்கள்' 'உட்பகைகள்' அனைத்திற்கும் ஒரே காரணமாய் இருப்பது கல்வியறிவு இன்மையே! எனவே **'மொழித்துறை மருத்துவம்'** செய்ய விரும்பும் ஒவ்வொருவரும் - அரசியல் ஆட்சி முறையிலே குடியாட்சி அறந்தழைக்க வேண்டுமென விரும்பும் ஒவ்வொருவரும் நம் நாட்டு மக்களனைவருக்

கும் 'கட்டாய'மாகக் கண்தரும் பணியிலே - கல்வி பரப்பும் தொண்டிலே முழுமூச்சாக ஈடுபடவேண்டும்

வேலை கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் தொழில் கற்ருலும் பரம்பரையாகப் பழகினுலும் - எக் குலம், எச்சாதி, எந்நிலை, எத்தொழில் எனவரும் நிலைகள் யாதாயினும் சரியே அவர்கட்குக் கல்வி கற்பிக்கவேண்டும். அரசியல் கட்சியினர் அனைவருக் கும் உரியதோர் ஆக்கவேலையாகும் இது.

கல்விச்சாலைகள் பெருகவேண்டும். தொடக்க நிலைக் கல்வி கட்டாயமாகவேண்டும். படிப்பகங்கள், நூல் நிலையங்கள், அறிவுதரும் இலக்கியக் கூட்டங் கள், பொது அறிவு பரப்பும் மாநாடுகள், நாட்டுப் பாடல் இலக்கிய விழாக்கள், பெரியோர்களின் நினைவு நாட்கொண்டாட்டங்கள் - இப்படியே அறிவுப்பணி பெருகவேண்டும். முதியோர் கல்வித் திட்டத்தில் அர சினரோடு முழுமூச்சாக ஒத்துழைக்கவேண்டும்.

மக்களின் மனக்கண் திறப்பது கல்வி - படிப்பு - ஆராய்ச்சி அறிவு. 'கண்ணுடையோர் என்போர் கற்ருேர்' என வள்ளுவம் வகுத்துரைத்தது. அக் கண்களை அகக் கண்களைத் தருக - தமிழ் மக்களுக் குக் கல்வியெனும் கண்களைத் தந்திடுக என நாம் தமிழ்நாட்டுப் பெரியோர்களை வேண்டுகிருேம்; அர சியல் கட்சிகளைக் கேட்டுக்கொள்ளுகிருேம்; ஆளும் அவையினர்க்கு அறிவுறுத்துகிருேம்.

o

வேங்கைமேல் வீழாதீர்...!

கவிஞர் சாமி பழனியப்பன்

சிரிக்கும் வையம்

தமிழ்மணக்கும் பூங்காவில் கழிநீர் தேக்கிச்
சாக்கடையின் முடைநாற்றம் வீசச் செய்து
'கமழ்கிறதே, இம்மணமே முல்லை நாற்றம்!
காசினியில் இதையொப்ப தெதுவும் இல்லை!
அமைதியுடன் இதைஏற்றுக் கொள்வீர் என்றால்
அறிவுடையோர் எவ்வாறே ஒப்பு வார்கள்?
தமிழகத்தை ஆளவந்தார் கூற்றி தென்றால்
தயங்காமற் கைகொட்டிச் சிரிக்கும் வையம்!

விரைந்துவாரீர்!

அருந்தமிழ மக்களிடம் வரியாய் வாங்கி,
அளவற்ற பொருள்சேர்த்தப் பொருளை யெல்லாம்
ஒருசிறிதும் தமிழ்வளர்க்க உதவி டாமல்
ஊதாரி மொழிவளர்க்கக் கச்சை கட்டி
விரையம்செய் கின்றாரே! மேலும் நம்மை
விலங்குகளாய் நடத்துகிறார்! ஐயகோ! நம
அருந்தமிழும் மாய்வதுவோ? தமிழினத்தின்
அன்புள்ளம் மாய்வதுவோ? விரைந்து வாரீர்!

களம் நோக்கி

செந்தமிழே அமிழ்தமென நாளும் செப்பும்
செய்யதமிழ்ப் புலவர்களே! உணர்வை மாய்க்க
எந்தெந்த வகையினிலோ திட்டம் செய்தே
'இம்'மென்ன உரிமையிலே என்கின் றீரே!
கொந்தளிக்கும் தமிழ்ப்புலவீர்! தமிழைத் தீயர்
கொன்றழித்தால் நும்வாழ்வு சிறப்ப தெங்கே?
செந்தமிழைக் காத்திடற்கு நீவி ரெல்லாம்
சேர்ந்தொன்றாய்க் களம்நோக்கி விரைந்து வாரீர்!

மறக்கவில்லை

" ஆங்கிலமிந் நாட்டுள்ளே நுழைந்த தாலே!
அரும்பெரிய வாழ்விழந்தோம்! அடிமை யானோம்,
இங்குள்ள ஆங்கிலத்தை, அதை நுழைத்த
தீயர்களை வாலறுத்துத் துரத்தினாலே
ஓங்குபுகழ் பெற்றிடலாம்! உலகம் போற்ற
உயர்வாழ்வு வாழ்ந்திடலாம்" என்றந் நாளில்
பாங்குடனே "தேசியத்" தோழர் சில்லோர்
பகர்ந்தனவெல் லாம்கேட்டோம்! மறக்க வில்லை!!

வேங்கைமேல் வீழ்ந்தால்

இன்றந்த எட்டினையே திருப்பு கின்றோம்!
இதுகுற்றம் என்பாரேல், எதிர்ப்பி னுக்குக்
குன்றாத தோளுண்டு! உண்டு வன்மை!
குதித்தோடிப் போர்செய்யும் வீர முண்டு!
பொன்றாத இலக்கியங்கள் கலைகள் யாவும்
பொதிபொதியாய்ப் பெற்றிலங்கும் தமிழை மாற்றார்
கொன்றுவிடற் கெண்ணுவரேல் தூங்கு கின்ற
கொடும்வேங்கை மேலிடறி வீழ்ந்தோ ராவார்!